விலை ரூபா 1-25

# ஈழநாடு

THE EELANADU.
NATIONAL TAMIL DAILY.

(1958 – வெள்ளி விழா ஆண்டு – 1983)

மலர் [illegible] கார்த்திகை 29 ரபி. அவ் 9 இதழ் 303
யாழ்ப்பாணம் வியாழக்கிழமை 15-12-83

★ தமிழர் பிரச்னைகள் ★

## பூர்வாங்க மாநாடு அடுத்த வாரம் நடைபெறும்

(கொழும்பு)

தமிழர் பிரச்னையைத் தீர்ப்பதற்கான சர்வகட்சி மகாநாடு தொடர்பான பூர்வாங்க கூட்டம் இம் மாதம் 20, 21-ம் திகதிகளில் நடத்தப்படவிருக்கிறது. இத்தகவலை அரசாங்கப் பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார்.

இப்பூர்வாங்க கூட்டத்தில் சர்வகட்சி மகாநாட்டுக்கு தற்போது இந்தியாவில் இருக்கும் தமிழர் விடுதலைக் கூட்டணிப் பிரமுகர்களை அழைப்பது பற்றி முடிவெடுக்கப்படும், என்றும் தெரிவிக்கப்பட்டது.

இக்கூட்டத்தில் சிறுபான்மையினரின் பிரச்னைகள் குறித்து எதுவும் ஆராயப்பட

(8-ம் பக்கம் பார்க்க

★ பாடசாலைகள் இயங்கவில்லை ★ பஸ்—மினி சேவை இல்லை ★ சினிமா காட்சிகளும் இல்லை

# யாழ்ப்பாண மாவட்டத்தில் அமைதியான ஹர்த்தால்

(யாழ்ப்பாணம்)

**யாழ் மாவட்டத்தில் நேற்று பூரணஹர்த்தால் அனுஷ்டிக்கப்பட்டது. எந்தவிதமான அசம்பாவித சம்பவங்களும் நேற்று மாலைவரை இடம்பெறவில்லை.**

யாழ்ப்பாணம் பெரியகடைப் பகுதியில் நேற்றுக் காலை அடுத்தடுத்துப் பலத்த சத்தத்துடன் வெடிச் சத்தங்கள் கேட்டதைத் தொடர்ந்து ஒற்றைக் கதவில் திறந்திருந்த ஒரு சில கடைகளும் முற்றாகப் பூட்டப்பட்டன!

### பாதுகாப்புப் படை ரோந்து

பொலிசாரும் முப்படையினரும் பாதுகாப்பு நடவடிக்கையில் பஸ்நிலையத்தில் நேற்று ஈடுபட்டிருந்தனர்.

யாழ் நகரம் நேற்று வெறிச்சோடிக் கிடந்தது. வீதிகளில் வாகனங்கள் காணப்படவில்லை. மக்கள் நடமாட்டம் குறைவாகக் காணப்பட்டது. கடைகள் மூடப்பட்டிருந்தன.

பஸ் நிலையத்தில் இராணுவத்தினரும் பொலிசாரும் காணப்பட்டனர். யாழ். பெரிய தபாற் கந்தோரில் பொலிசார் காவல்புரிந்தனர். அரசாங்கக் கட்டிடங்களில் முப்படையினரின் பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன.

யாழ். நீதிமன்றத்தில் வழக்கம்போல் வழக்கு விசாரணைகள் நடைபெற்றன.

### பஸ்சேவை இல்லை

வ. போ. ச. பஸ்சேவைகள் நடைபெறவில்லை. மினி பஸ் சேவைகளுமில்லை. டாக்ஸி, ஓட்டோ றிக்ஷோ சேவைகளும் நடைபெறவில்லை.

வீதிகளில் மாட்டு வண்டிலைக் கூட நேற்றுக் காண முடியவில்லை.

(8-ம் பக்கம் பார்க்க)

## கிளிநொச்சியிலும் பூரண கடையடைப்பு

[கிளிநொச்சி]

கிளிநொச்சியிலும் நேற்று பூரண ஹர்த்தால் அனுஷ்டிக்கப்பட்டது.

கிளிநொச்சி பரந்தனில் கடைகள் யாவும் பூட்டப்பட்டிருந்தன.

பாடசாலைகளில் மாணவர் மிகக்குறைவாகவந்திருந்தனர். நகரபுறப் பாடசாலைகளில் சொற்பமான மாணவரே வந்திருந்தனர்.

கிளிநொச்சி டிப்போ பஸ் சேவை நடைபெறவில்லை. தனியார் மினி பஸ் சேவைகளும் நடைபெறவில்லை.

அரசாங்க அலுவலகங்களில் கணிசமான ஊழியரே வந்திருந்தனர். பொதுமக்கள் நடமாட்டம் குறைவாகக் காணப்பட்டது. [க]

## பருத்தித்துறை, வல்வை: பூரண ஹர்த்தால்

(புலோலி)

பருத்தித்துறை, வல்வெட்டித்துறை ஆகிய பகுதிகளில் நேற்று பூரண ஹர்த்தால் அனுஷ்டிக்கப்பட்டது.

பாடசாலைகளுக்கு மாணவர்கள் எவரும் செல்லாததினால் பாடசாலைகள் வெறிச்சோடிக் கிடந்தன.

இ. போ. ச பஸ் சேவைகள், தனியார் பஸ் சேவைகள் எதுவும் நடைபெறவில்லை.

சகல வணிக நிலையங்களும் கடைகளும் பூட்டப்பட்டிருந்தன. வீதிகளில் மக்கள் நடமாட்டம் குறைவாகக் காணப்பட்டது பொதுவாக இப்பகுதியில் எங்கும் ஒரே அமைதி நிலவியது.

### மன்னாரில்...,

மன்னாரில் இ போ. ச. பஸ் சேவை நிறுத்தப்பட்டதைத் தொடர்ந்து நேற்று பாடசாலைகளில் மாணவர்களின் வரவு மிகக் குறைவாகக் காணப்பட்டது

மினிபஸ் சேவைகளும் காலை 10 மணிவரையுடன் நிறுத்தப்பட்டன.

பஸ் சேவைகள் இல்லாததினால் அரசாங்க உத்தியோகத்தர்கள் பெருமளவில் வேலைக்குச் செல்லவில்லை. வர்த்தக நிலையங்கள் வழமை போல் திறந்திருந்தன. பஸ் போக்குவரத்து இல்லாமையினால் உள்ளூர் தபால் சேவையும் நடக்கவில்லை. (சூ)

## ஜனாதிபதியின் வவனியா விஜயம் ரத்து

[வவனியா]

ஜனாதிபதி திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தன தமது வவனியா விஜயத்தை ரத்துச் செய்துள்ளார்.

19-ம் திகதி வவனியா ஆஸ்பத்திரிச் சந்தியில் புத்தர் சிலை அமைந்துள்ள காணிக்குள் பத்து லட்சம் ரூபாய் செலவில் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட தொல்பொருள் நூதனசாலையின் கட்டடத்தை திறந்து வைப்பதற்காகவே ஜனாதிபதி வவனியாவுக்கு விஜயம செய்ய இருந்தார் ஜனாதிபதிக்குச்சிறப்பான வரவேற்பு அளிக்கவும் வவனியா அரசாங்க அதிபர் ஏற்பாடுகளும் செய்திருந்தார்.

ஜனாதிபதியின் விஜயம் இப்போது ரத்துச்செய்யப்பட்டுள்ளது. ஜனாதிபதிக்குப் பதிலாக கலாசார அமைச்சர் திரு. ஈ. எல் பி. குருள்ளே எதிர்வரும் 18-ம் திகதி வவனியாவுக்கு விஜயம் செய்கிறார். 18-ம்திகதி ஜனாதிபதி திறந்து வைக்க இருந்த கட்டடத்தை திரு. குருள்ளே திறந்துவைப்பார்.

## மக்கள் வங்கி கிளைகளுக்கு மூடு விழா?

(கரவெட்டி)

வடபகுதி மக்கள் வங்கிக் கிளைகள் சில மூடப்படுமா?

இது சம்பந்தமாக இவ்வாரம்கொழும்பில் நடைபெறவிருக்கும் உயர்மட்டஆலோசனைக் கூட்டத்தில் இறுதி முடிவு எடுக்கப்படும் எனத்தெரியவருகிறது.

வடபகுதி மக்கள் வங்கிக்கிளைகளின் பாதுகாப்புக் குறித்து ஆராயும் பொருட்டு, வட பிராந்திய மக்கள்வங்கி பாதுகாப்புச்சேவை அதிபர் திரு. வி. கே. ஆறுமுகம், அனைத்து இலங்கை மக்கள் வங்கி பாதுகாப்புச்சேவை அதிபர் திரு. ஸ்டான்லி சேனநாயக்காவினால் அவசரமாக நேற்று அழைக்கப்பட்டுள்ளார்.

## பெண் இராணுவத்தினர் தங்குமிட கட்டிட வேலைகளுக்கு 35 லட்சம்!

(கொழும்பு)

பெண் இராணுவத்தினரின் புதிய தங்குமிடத்துக்கான கட்டிட வேலைகளுக்கென 35 லட்சம் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது.

இக் கட்டிடம் கொழும்பு கிங்ஸி வீதியில் அமைக்கப்படுமென்றும். இந்த ஆண்டு இராணுவத்தில் சேர்த்துக்கொள்ளப்படும் பெண்கள் இதில் தங்குவார்களென்றும் தெரிவிக்கப்பட்டது.

பாராளுமன்றத்தில் வரவு செலவுத்திட்ட குழுநிலை விவாதத்தின்போது பாதுகாப்பமைச்சுக்கான குறைநிரப்பு மதிப்பீட்டுத் தொகையாக 5 கோடி 49 லட்சம் ரூபாவை வழங்க சபை அங்கீகரித்தது.

இதனைத் தொடர்ந்தே இத் தொகையில் ஒரு பகுதியாக மேற் குறிப்பிட்ட தொகை பெண் இராணுவத்தினரின் தங்குமிட வசதிக்கென ஒதுக்கப்பட்டது. எஞ்சிய தொகை பாதுகாப்புச் சேவையினரின் வாகனச்செலவு, பிரயாணச் செலவு, மற்றும் அவசர செலவுகளுக்கென ஒதுக்கப்பட்டது.

பாதுகாப்பமைச்சர் என்றரீதியில் ஜனாதிபதி ஜயவர்த்தன, இக்குறை நிரப்பு மதிப்பீட்டுத் தொகைக்கு சிபார்சு செய்திருந்தார். (கி)

## 5-வது கிரிக்கெட் டெஸ்ட் மே. இந்தியா இன்னிங்ஸ் வெற்றி!

(கல்கத்தா)

இந்தியாவுக்கும் மே. இந்தியாவுக்குமிடையே கல்கத்தாவில் நடைபெற்ற 5-வது கிரிக்கெட் டெஸ்டில், மே. இந்தியக் கோஷ்டி இன்னிங்ஸ் வித்தியாசத்தால் வெற்றி பெற்றது.

நேற்று நாலாம் நாள் ஆட்டம் ஆரம்பமாகி மதிய போசன இடைவேளைக்கு முன்பாகவே இந்தியாக் கோஷ்டி 2-வது இன்னிங்ஸில் சகல விக்கெட்டுகளையும் இழந்து மொத்தம் 99 ஓட்டங்களைப் பெற்றது. அசோக் மல்ஹோத்ரா 35 ஓட்டங்களைப் பெற்றார். மே. இந்தியக் கோஷ்டியின் பந்துவீச்சு வீரர் மல்க்கம்

(8-ம் பக்கம் பார்க்க)

# வரி விளம்பரம்

## விற்பனைக்கு

உடுவில் கிழக்கு அம்பல வாணர் வீதியில் கே. கே. எஸ். ரோட்டில் இருந்து 25 யார் தூரத்தில் வீடு கட்டுவதற்கு உகந்த 4½ பரப்பு காணி உடன் விற்பனைக்குண்டு, விபரங்களுக்கு: தேவராசா, நாகவேல் அகம், கே. கே. எஸ். ரோட், சுன்னாகம். 10546

---

27-ம் திகதி நடைபெறவிருக்கும் சமூகக்கல்வி பாடத்தில் மிக இலகுவாக விசேட, அதிவிசேட சித்திகளைப் பெற்றிட வாங்கிப் படியுங்கள் சமூகக் கல்வி வினாவிடை, ஆக்கியவர் K. S. முத்துலிங்கம் வடமாநிலத்தில் பெருந்தொகையானோர்க்கு, விசேட திறமைச் சித்திகளைப் பெற்றுக் கொடுத்தவர். கிடைக்குமிடம்:- பூபாலசிங்கம் புத்தகசாலை, யாழ்ப்பாணம். தபாலில் பெற வேண்டுமாயின் ரூபா 11/ற்கான மணி ஓடர் அனுப்பவும். பின்வரும் விலாசத்திற்கு;- S. சிவபாதம், தமிழகம், நவாலி தெற்கு, மானிப்பாய். 10552

---

ஒரு பரப்புக்காணி (வர்த்தகத்திற்கு) வியாபாரிகளுக்கு ஏற்றது. 142, ஆஸ்பத்திரி வீதிக்காணியோடு பின்னால் சேர்ந்தது. காணி முகப்பு "ஈரன்" தியேட்டர் வீதியில். விபரம்: 19, கடைச்சாமிவீதி, வண்ணார்பண்ணை. 10555

---

யாழ்ப்பாணம் பீச் ரோட்டில் ஐஸ் பேக்டரிக்கு அருகாமையில் 3 பரப்பு காணி விற்பனைக்குண்டு. தொடர்பு: டி. பி. ஜே. ஜோன்ஸன், 171, குருசோ வீதி, சுண்டிக்குளி. 10553

---

கிளிநொச்சி பழைய பஸ் நிலையத்திற்கு அருகாமையில் இரண்டு கடைகள் விற்பனைக்குண்டு. தொடர்பு கொள்ளவும். சா. செல்வரட்ணம், D/4, கிளிநொச்சி, அல்லது- 133, கன்னாதிட்டி ரோட், யாழ்ப்பாணம். 10547

---

குளப்பிட்டி சந்திக்கு அருகாமையில் நடராஜா வீதியில் 1½ பரப்பு காணி உடன் விற்பனைக்கு உண்டு. தொடர்பு கொள்ளவேண்டிய முகவரி: சி. குகனேந்திரன், நடராஜா வீதி, கொக்குவில் மேற்கு, கொக்குவில். 10557

---

நெல்லியடி, சந்தைக்கு அருகாமையில் கரவெட்டி மேற்கில், வெற்றியா வளவு என்னும் மூன்று பரப்புக் காணியும் மூன்று அறையுடன் கூடிய வீடு, கிணற்றுடன் உடன் விற்பனைக்குண்டு. விபரங்களுக்கு:- செல்வராசா, சித்தாப் பத்தனை, வல்வெட்டி. 10542

---

நல்லூர் சந்திரசேகரப் பிள்ளையார் கோவில் ஒழுங்கையில் (கல்வியங்காடு சந்தைக்கு சமீபம்) ஒரு பரப்பு காணியில் அமைந்த இரண்டு அறைவீடு விற்பனைக்குண்டு. விலை ரூபா 1, 75, 000. வே. சுப்பையா, சந்திரசேகரப்பிள்ளையார் கோவில் ஒழுங்கை, நல்லூர். 10558

---

## விற்பனைக்கு

யாழ்மிளகாய்த்தூள் - திறம்படத்தயாரித்து 50, 100, 200 கிறும் பைக்கற்றில் விற்பனைக்குண்டு தயாரிப்பாளர், விற்பனையாளர்: எஸ். பி. வேலாயுத பிள்ளை அன்ட் சன்ஸ், செம்பியன் லேன், கொக்குவில். போன்; 24062 (10484)

---

மாசியப்பிட்டி கந்தரோடை ரோட்டில் 4 பரப்பு காணி சகல வசதிகளுமுள்ள வீட்டுடன் விற்பனைக்குண்டு. அதே விலாசத்தில் சி. கந்தசாமியுடன் உடன் நேரில் தொடர்பு கொள்ளவும். 10532

---

கல்வியங்காடு, புதுசெம்மணி வீதியில் நாலுபரப்பு காணி விற்பனைக்குண்டு. விபரங்களுக்கு: 92, பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம். 10559

---

தெல்லிப்பளையில் நான்கு பரப்புக்காணி முக்கிய இடங்களுக்கு அருகாமையில் விற்பனைக்குண்டு. விபரங்கட்கு: நந்தகுமாரன், சட்டத்தரணி, 45, கச்சேரி, நல்லூர்ரோட், யாழ்ப்பாணம். 10543

---

### மானிப்பாய் கோவில்பற்று ப. நோ. கூ. சங்கம்

### கேள்விகோரல்

மானிப்பாய் கோவிற்பற்று ப. நோ. கூ. சங்கத்தால், வைபவங்களுக்கு வாடகைக்கு விடப்படுகின்ற தற்காலிக மாற்றி அமைக்கக்கூடிய அளவுகளைக் கொண்ட இரும்பு பைப்பினாலும், பீலித்தகரத்தினாலும் ஆக்கப்பட்ட கொட்டகைகளுக்கான கேள்விகள் கோரப்படுகின்றது. கேள்விகள் அரக்கு முத்திரையிடப்பட்டு, பதிவுத் தபால் மூலம் பொது முகாமையாளர், மானிப்பாய் கோவில் பற்று ப. நோ. கூ. சங்கம், மானிப்பாய் என்ற விலாசத்திற்கு அனுப்பி வைக்கவும். கேள்விகள் 30-12-83 வெள்ளிக்கிழமை நண்பகல் 12-00 மணிவரை ஏற்றுக் கொள்ளப்படும். கேள்விகளுடன் கொட்டகைகளுக்கான மாதிரிவரைபடமும் இணைக்கப்படல் வேண்டும்.

பொது முகாமையாளர்,
மானிப்பாய் கோவில்பற்று
ப. நோ. கூ. சங்கம்,
மானிப்பாய்.

10548

---

### தவறிவிட்டன

கீழ்க்காணும் இலக்க காசோலைகள் தவறி விட்டன.

D/44 — 178351
D/44 — 178352
H/T 1 — 168497
H/T 1 — 166948

கண்டெடுத்தவர்கள் ஒப்படைத்தால் சன்மானம் வழங்கப்படும்.

க. விஜயநாதன்,
கலா ரேடேர்ஸ்,
கிளிநொச்சி.
(10561)

---


### ஷாமினு கும் கும்

(சாந்துப் பொட்டு)

தென்னிலங்கையிலும், மலைநாட்டிலும் பிரசித்தி பெற்ற 'ஷாமினு கும் கும்' இப்பொழுது யாழ்ப்பாணத்தில் எங்கும் விற்பனையாகின்றது.

சாந்துப்பொட்டு வேண்டும்பொழுது 'ஷாமினு கும் கும்' என்று கேட்டு வாங்குங்கள்.

மொத்தமாகப்பெறவிரும்புபவர்கள் தொடர்புகொள்ளவும்.

WHITE FIELD INDUSTRIES
VALLAI ROAD, CHANKANAI. (10556)


---

## சேவை

எமது ஸ்ருடியோவில் வாங்கும் கலர் பிலிம் சுருள்களை எம்மிடம் Processing and Printing செய்து 24 படங்களுக்கு மேல் பெற்றுக்கொண்டால் ஒரு கலர்பிலிம் சுருள் இனாமாக வழங்கப்படும். Processing ரூபா 30/-, P. C. Printing ரூபா 6/50 கொழும்பு ஸ்ருடியோ, யாழ்ப்பாணம். 10509

---

புதிய பழைய படங்கள் வெளிவந்துள்ளன. இன்றே அங்கத்துவம் பெறுங்கள். சிற்றி வீடியோ கிளப், 185, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். 10269

---

## தேவை

வார இறுதி நாட்களுக்கு வாய்ப்பாட்டு. வயலின் கற்பிக்க பட்டதாரி ஆசிரியை யாழ். நகர் இசைமன்றத்திற்கு தேவை. வடஇலங்கை சங்கீத சபையின் ஆசிரியர் பகுதியில் சித்தியடைந்தவர்களும் விண்ணப்பிக்கலாம். விளம்பர இல: 10529, C/o ஈழநாடு லிமிட், யாழ்ப்பாணம். 10529

---

## FOR SALE

Ford Escort 8 sri six thousand series in immculate condition. Contact - Manager, Pedro Exports Limited, 151, Kasturiar Road, Jaffna. Phone: 24297. (10562)

---

### மல்லாகம் மாவட்ட நீதிமன்றம்

### பின்னுறுதிக் கட்டளைபற்றிய அறிவித்தல்

சுன்னாகம், ஏழாலை மேற்கைச் சேர்ந்த சிவசிதம்பரம் சிவசுப்பிரமணியம் என்பவரது மரணசாதனமில்லாச் சொத்துக்களின் விடயத்தில்

— காலஞ்சென்றவர்

வழ. இல: ரி/176

சிவசிதம்பரம் சிவசுப்பிரமணியம் கைம்பெண் தெய்வநாயகி, ஏழாலை மேற்கு, சுன்னாகம்.

— மனுதாரர்

மேலேயுள்ள இலக்கங் கொண்ட மரணசாதன வழக்கு மேலே பெயர்குறிப்பிடப்பட்ட இறந்துபோனவரின் மரணச் சொத்தை நிருவகிப்பதற்காக மேற்படி நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்டு அதில் அதற்கிணங்க பின்னுறுதிக்கட்டளை பதியப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

அக்கறையுள்ள ஆள் எவரும் 1984ம் ஆண்டு தைமாதம் 4ந் திகதி முற்பகல் 9 மணிக்கு இந் நீதிமன்றத்தின் முன்னர் தோன்றி அவ்வாறு பதியப்பட்ட பின்னுறுதிக்கட்டளை ஏன் முற்றானதாக்கப்படலாகாதென்பதற்குக் காரணங் காட்டுமாறு இத்தால் தேவைப்படுத்தப்படுகின்றார்.

1983ம் ஆண்டு ஐப்பசி மாதம் 19ம் திகதி.

மன்றின் கட்டளைப்படி

(ஒப்பம்)
ஆழ்வார் சிவபாதசுந்தரம்
பதிவாளர்

வரைதல்:

(ஒப்பம்)
அ. உமாசங்கர்
மனுதாரின் சட்டத்தரணி
(10475)

---

### வியாபாரம் பெருக விளம்பரம் செய்க

---


### இன்று முதல் ஆரம்பம்

### "யாழ் சென்றல் கிளினிக்"

YARL CENTRAL CLINIC

இங்கு சகல மருத்துவ சிகிச்சைகளும் வைத்திய நிபுணர் ஆலோசனைகளும் சிரமம் இன்றி பெறுவதற்கு சகல வசதிகளும் உண்டு.

180, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.
போன்: 23366

C. S. K.
கட்டிடத்துக்கு
அருகாமையில்

(10531)

---

### எங்கள் இன்றைய வெளியீடு

★ சிவாஜி, பிரபு, சுஜாதா நடித்த
சந்திப்பு
(PYRAMID ORIGINAL COPY)
★ ராஜீவ், ராஜேஸ், சுலக்சனு நடித்த
யுகதர்மம்
(V. G. P. ORIGINAL COPY)
★ எம். ஜி ஆர். — சரோஜாதேவி நடித்த
தாயின் மடியில்

உங்கள் ஓடர்களை உடன் பதிவு செய்துகொள்ளுங்கள்.

### குணம் வீடியோ சென்டர்

42, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 23665

(10563)

---

வேலை செய்வோர், பல்கலைக்கழக மாணவர்கள், மற்றும் அனைவரது வேண்டுகோளுக்கிணங்க

வார இறுதிப் புதிய பிரிவு

SPECIAL

### SPOKEN ENGLISH Course

(6 மாதம்)

ஆரம்பம்:- 17-12-83 மாலை 3-30

ஆசிரியர்:- கே.எஸ்.என். குமரன்

1. நேர சூசிகை சனி, ஞாயிறு 3-30 — 5-30 (மாலை)
2. அச்சடித்த விளக்கக் குறிப்புகள் இலவசம்.
3. வரையறுக்கப்படாத மணித்தியால விரிவுரைகள்.

விபரங்கட்கு:-

கே. எஸ். என். குமரன்,
402 1/2, கே. கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம்.
(சிவன்கோவிலடி) 10524


---

### பதவி வெற்றிடம்

யாழ். நகர பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் கூட்டுறவு மருத்துவ மனையில் கீழ்க்காணும் பதவி வெற்றிடங்களுக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. பதவிகளுக்கான சம்பளம், கல்வித்தகைமை, அனுபவம், வயது மற்றும் இதர விபரங்களை நேரிலோ அல்லது தபால் மூலமோ கீழ்க்காணும் முகவரியில் பெற்றுக்கொள்ளலாம். விபரங்களைத் தபாலில்பெற விரும்புவோர் விலாசமிடப்பட்டு முத்திரை ஒட்டிய தபால் உறை அனுப்பிவைக்கவேண்டும்.

#### பதவிகள்

1. மருத்துவக் கலாநிதி (Medical Officer).
2. பதிவுபெற்ற மருத்துவர் (R. M. P.).
3. நிர்வாகச் செயலாளர் (Administrative Secretary).
4. மருந்து தயாரித்துக் கொடுப்பவர் (Pharmacist).
5. சத்திர சிகிச்சை மண்டபத் தாதிமார் (Theatre Nurse).
6. பிரசவ மருத்துவப் பயிற்சிபெற்ற பொதுத் தாதிமார் (General Nurse with Mid-wifery training).
7. களஞ்சியப் பொறுப்பாளர் (Store-keeper).
8. வரவேற்பாளரும்-தொலைபேசி இயக்குநரும். (Receptionist-cum-Telephone Operator).
9. கணக்கறிவு பெற்ற எழுதுநரும் - காசாளரும் (Clerk-cum-Cashier with accounting knowledge).
10. மருந்து கலப்பவர் (Dispenser).
11. காரியாலய சேவகர் (Office Peon).
12. தொழிலாளி-பகல் வேலை (Labourer).

விண்ணப்பங்கள் பதிவுத் தபால் மூலம் தலைவர், யாழ். நகர பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம். காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம் என்ற விலாசத்திற்கு 27-12-83ம் திகதியன்றோ அல்லது இதற்கு முன்போ கிடைக்கக் கூடியதாக அனுப்பிவைக்கப்படல்வேண்டும். பதவிகளுக்கு விண்ணப்பிக்கும்பொழுது தபால் உறையின் இடது பக்க மேல் மூலையில் பதவியின் பெயர் குறிப்பிடப்படுவதுடன் ஒவ்வொரு பதவிக்கும் தனித்தனி விண்ணப்பங்கள் அனுப்பிவைக்கப்படல்வேண்டும்.

பொதுமுகாமையாளர்,
யாழ் ப. நோ. கூ. சங்கம்,
காங்கேசன்துறை வீதி,
யாழ்ப்பாணம்.

10554

# இந்திய கடற்படை அதிகரிப்பு!

## பிரிட்டிஷ் விமானங்கள் கொள்முதல்!!

(புதுடில்லி)

இந்திய கடற்படையின் பலம் மேலும் அதிகரிக்கப்பட்டு நவீனமயமாக்கப்படவுள்ளது. இதற்கென இந்திய பாதுகாப்பு அமைச்சு நவீன கடற்படை விமானங்களையும், ஏனைய சாதனங்களையும் கொள்வனவு செய்யவுள்ளது.

இந்தியா பிரிட்டனிடருமிருந்து 'ஸீஹரியர் ஜெட்' ரக யுத்த விமானங்கள் சிலவற்றைக் கொள்வனவு செய்துள்ளது. இந்த ரகத்தைச் சேர்ந்த முதலாவது விமானம் இந்திய கடற்படை விமானந் தாங்கிக் கப்பலான 'விக்ரஹாந்'தில் சேர்ந்துகொள்வதற்கென எதிர்வரும் சனிக்கிழமை கோவா மாநிலம் வந்தடையும். இந்த 'ஸீஹரியர்' ரகத்தைச் சேர்ந்த ஏனைய ஜெட் விமானங்கள் படிப்படியாக இந்திய கடற்படையில் சேர்த்துக்கொள்ளப்படும்.

'ஹரியர் ஜெட்' சண்டை விமானங்கள் பிரிட்டனின் தயாரிப்புகளாகும். போக்லண்ட் யுத்தத்தில் இந்த விமானங்கள் பிரிட்டிஷ் கடற்படைக்கு உறுதுணையாக இருந்தன. பல ஆர்ஜன்டீன இராணுவ அணிகளையும், கப்பல்களையும் இந்த 'ஸீஹரியர்' விமானங்களே தாக்கின என்பது குறிப்பிடத்தக்கது. இதனையடுத்து சர்வதேச சந்தையில் இந்த விமானங்களுக்கு சிறந்த கிராக்கி ஏற்பட்டது.

'ஸீ ஹரியர் ஜெட்'கள் செங்குத்தாகவே மேலெழக் கூடியவை. அதேவேளை தரை நோக்கியும் அவ்வாறு வரக் கூடியவை. இவற்றில் ஆகாயத்திலிருந்தவாறே விமானங்களையும், கப்பல்களையும் அழிக்கும் ஏவுகணைகள் உள்ளன. அத்துடன் தரையிலுள்ள இராணுவ அணிகளைச் செயலிழக்கவைக்கும் சாதனங்களும் பொருத்தப்பட்டுள்ளன.

இந்திய கடற்படை இந்த 'ஸீஹரியர் ஜெட்' விமானங்களுடன் வேறு எட்டுப் போர் விமானங்களையும் வாங்குகின்றது. இவற்றில் ஆறு ஒற்றை ஆசனம் கொண்டவை. ஏனையவை இரட்டை ஆசனம் கொண்டவை. இவை முக்கியமாகப் பயிற்சிகளுக்கெனவே பாவிக்கப்படும். இந்தியா பிரான்ஸிடமிருந்தும் 'மிராஜ்' ஜெட்விமானங்கள் சிலவற்றையும் ஏற்கனவே கொள்வனவு செய்துள்ளது. இந்த விமானங்களை மேலும் கொள்வனவு செய்யவும் உத்தேசித்துள்ளது. [கி]

குடிநீர்த்தட்டுப்பாட்டை நீக்க

## உவர்நீரை நன்னீராக்கும் முன்னோடிப் பரிசோதனை!

### தமிழ்நாடு இராமநாதபுரத்தில் ஆரம்பம்

சென்னை, டிச. 14

குடிநீர் தட்டுப்பாட்டை நீக்கஉவர்நீரை நன்னீராக்கும் முன்னோடிப் பரிசோதனையொன்று இராமநாதபுரம் மாவட்டத்தில் மேற்கொள்ளப்படவுள்ளது. இத்தகைய பரிசோதனை இந்தியாவின் வரட்சியால் பாதிக்கப்படும் வேறு நான்கு மாநிலங்களிலும் நடத்தப்படவிருக்கிறது.

குஜராத் ஆராய்ச்சிக்கழகமொன்றைச்சேர்ந்த தகிக்கான் என்ற நிபுணரே இந்த உவர்நீரை நன்னீராக்கும் பணியை மேற்கொள்ளவுள்ளார். இந்திய மத்தியஅரசு இப் பணிக்கென இரண்டு கோடி ரூபா நிதியுதவி வழங்க முன்வந்துள்ளது. அத்துடன் இப்பணி இடம்பெறவுள்ள மாநிலங்களின் அரசுகளும் தமது ஒத்துழைப்புக்களை வழங்க உறுதியளித்துள்ளன.

நிபுணர் தகிக்கானின் கருத்துப்படி, கடல்நீரை அதன் உவர்தன்மையை நீக்கி குடிநீராக மாற்றமுடியுமென்று தெரிவிக்கப்பட்டுள்ளது. எதிர்வரும் கோடைகால வரட்சிக்கு முன்னர் இந் நன்னீராக்கும் பணி வெற்றியளித்துவிடுமென்றும், அதனையடுத்து ஐம்பதாயிரம் லீட்டர் உவர்நீரை நன்னீராக மாற்றமுடியுமென்றும் தெரிவிக்கப்பட்டது.

இதுபோன்ற பரிசோதனை ஆந்திரா மாநிலத்தின் தெலுங்கானு என்ற இடத்திலும் இடம்பெறும். தமிழகத்தில் இராமநாதபுரமே கோடைகாலங்களில் கடுமையான வரட்சிக்குட்படும் பிரதேசமாகும்.

மத்திய கிழக்கு நாடுகள் சிலவற்றிலும் குடிநீர்த் தட்டுப்பாட்டை நீக்க கடல் உவர் நீரை அந்நாடுகள் குடிநீராக மாற்றிவருகின்றன. இப்பணியில் பல வெளிநாட்டு, உள்நாட்டு நிறுவனங்கள் ஈடுபட்டுவருகின்றன என்பது குறிப்பிடத்தக்கது. (கி)

தமிழக அரசுக்கு எதிரான ஆர்ப்பாட்டம் இன்று

## ஆயிரக்கணக்கில் தி. மு. க. தொண்டர்கள் கைது!

### கருணாநிதி கண்டனம்

(சென்னை)

தி. மு. க. தொண்டர்கள் ஆயிரக்கணக்கில் கைதுசெய்யப்படுவதாக தலைவர் திரு. மு. கருணாநிதி குற்றம்சாட்டியுள்ளார்.

தமிழக அரசுக்கு எதிராக எதிர்க்கட்சிகள் ஆர்ப்பாட்டம் நடத்தப்போவதாக அறிவித்ததைத் தொடர்ந்து தி. மு. க. தொண்டர்கள் ஆங்காங்கே ஆயிரக்கணக்கில் கைதுசெய்யப்படுவதாக அவர் தெரிவித்தார்.

தி. மு. க. உட்பட அனைத்து எதிர்க்கட்சிகளும் இணைந்து தமிழக அரசுக்கு எதிராக மத்திய மாநில அலுவலகங்களுக்குமுன்னால் இன்று ஆர்ப்பாட்டம் நடத்த முடிவு செய்துள்ளன. (கு)

## புதிய புத்தகங்கள் கிடைக்கவில்லை

(மானிப்பாய்)

பாடசாலைகளுக்கு அடுத்த வருடத்துக்கான புதிய புத்தகங்கள் இன்னும் அனுப்பப்படவில்லையாம்.

சென்ற வருடம் டிசம்பர் மாத இறுதித் தவணையின் போதே புதிய வருடத்துக்கான புத்தகங்கள் இங்கு விநியோகிக்கப்பட்டு விடுதலையில் சென்ற மாணவர்கள் விடுதலைக்குள் புதிய புத்தகங்களைக் கற்றுக்கொள்ளக் கூடிய வாய்ப்பிருந்தது.

ஆனால் இவ்வித வாய்ப்பு இருக்குமோ என்ற சந்தேகம் இப்போது எழுந்துள்ளது.

பாடசாலை விடுமுறை விடுவதற்கு இன்னும் இரண்டு நாட்களே இருந்த போதிலும் யாழ்ப்பாணத்திலுள்ள பாடசாலைகளுக்கு இன்னும் புதிய புத்தகங்கள் பற்றிய அறிவித்தல்கள் வந்து சேரவில்லையாம். (து)

## வளரும் நாடுகளுக்கு 9,000 கோடி டாலர் இழப்பு

ஜெனீவா, டிச. 14

மேலை நாடுகளுடன் ஏற்றத்தாழ்வாக பொருளாதார உறவுகளை கொண்டிருப்பதால் வளரும் நாடுகளுக்கு ஆண்டுதோறும் 9.000 கோடி டாலர் இழப்பு ஏற்படுகிறதென்று ''உலகப் பொருளாதாரமும் சர்வதேச உறவுகளும்'' என்ற சஞ்சிகை எழுதுகிறது. இது வளரும் நாடுகளின் மொத்த வருடாந்த ஏற்றுமதி வருமானங்களில் 61 சதவிகிதத்திற்கும் அதிகமாகும்.

1970ம் ஆண்டுகளின் பிற்பகுதியில் சர்வதேச பொருளாதார நிலவரத்தை ஆராயும் போது, மேலைய பன்னாட்டு ஏகபோகங்களின் நடவடிக்கைகளால் பெருநஷ்டமடையும் மூன்றும் உலக நாடுகளின் ஐந்துமுக்கிய துறைகள் உள்ளன. வளரும் நாடுகளுக்கு மேலைய மூலதன ஏற்றுமதிகள், மேலையதொழில் நுட்பங்களை வளரும் நாடுகள் சார்ந்திருத்தல். பாகுபாடு காட்டும் வணிக நடைமுறைகள், அறிவுத் துறையினரை மேலைநாடுகளுக்குக் கவர்ந்திழுத்தல். மேலைய நாணயச் செலாவணியில் ஏற்றஇறக்கங்கள் என்பவை இவற்றில்அடங்கும்.

வளரும் நாடுகளிலிருந்து வருடந்தோறும் 2 500 கோடி டாலர்களை, தமது மூலதன முதலீட்டுக்கான லாபங்கள் என்ற பேரில் பெரும்பாலும் அந்நிய நாணயச் செலாவணியாக மேலைய ஏகபோகங்கள் எடுத்துச்செல்கின்றன. இது வளரும் நாடுகளுக்குப் பேரிழப்பாகும்.

வணிக நடைமுறைகளில் மேலை நாடுகள பாகுபாடுகாட்டுவதால், மூன்றும் உலகநாடுகளது ஏற்றுமதிகளின் வாங்கும் சக்தி குறைகிறது. இதன் விளைவாக அவற்றுக்கு ஆண்டுதோறும் 1,300 கோடி டாலர் இழப்பு ஏற்படுகிறது. மேலை நாடுகளின் இறக்குமதித் தீர்வைக் கட்டுப்பாடுகளின் விளைவாக வளரும் நாடுகளுக்கு அன்னியச் செலாவணி விஷயத்தில் 1,000 கோடி டாலர் இழப்பு ஏற்படுகிறதென்று மதிப்பிடப்பட்டுள்ளது.

அமெரிக்கா. பிரிட்டன், கனடா ஆகியவை வளரும் நாடுகளின் அறிவுத்துறையினரைத் தமது நாடுகளுக்குக் கவர்ந்து இழுப்பதால், வளரும் நாடுகளுக்கு ஆண்டுதோறும் 500 கோடி டாலர் இழப்பு ஏற்படுகிறது,

மேலை நாடுகளுடன் பிணைக்கப்படும் கடன்கள், அதிக விலையுள்ள ஆயுத ஒப்பந்தங்கள், தேசியமயமாகபப்பட்ட தமது சொத்துக்களுக்காக மேலை நாடுகள் பெருமளவில் கோருகின்ற நஷ்ட ஈடுகள், பன்னாட்டு ஏகபோகங்களின் கிளைகளால் வளரும் நாடுகளில் அடையப்பெறும் வரிச்சலுகைகள். இவற்றால் வளரும் நாடுகள் மேன்மேலும் இழப்புக்கு உள்ளாகின்றன.

அணு ஆயுத யுத்தம்:

## விவேகத்தினுல் மட்டுமே தவிர்க்கமுடியும்''

### - யூரி அந்ரபோவ்

மாஸ்கோ, டிச. 14

ஐரோப்பாவில அணு ஆயுதக் கட்டுப்பாடு சம்பந்தமான பேச்சுக்களில் தொடர்ந்து பங்குகொள்வது சாத்தியமில்லை என்று சோவியத் யூனியன் அதிகாரபூர்வமாக அறிவித்துள்ளது.

பரஸ்பரம் ஏற்கக்கூடிய உடன்பாடுகாணும் வாய்ப்புக்களுக்குக் குழியறிக்கும் நடவடிக்கைகளை வாஷிங்டன் எடுப்பதே மாஸ்கோவின் இந்தப் பொறுப்பான முடிவுக்குக் காரணம் என்று சோவியத் ஜனதிபதி யூரி அந்ரபோல் கூறினர்.

''பேச்சுக்களைத் தொடர்ந்து நடத்துவது ஐரோப்பிய பந்தோபஸ்துக்கும் உலக பந்தோபஸ்துக்கும் குழிபறிக்க அமெரிக்காவும் மற்றும் சில நேட்டோ நாடுகளும் எடுக்கும் நடவடிக்கைகளை மூடிமறைப்பதாகும்'' என்று சோவியத் தலைவர் கருத்துத் தெரிவித்தார்.

''சோவியத் யூனியனுக்கு அச்சுறுத்தல் ஏற்படுத்தும் முறையில் அமெரிக்காவும் அதன் ஆதரவு நாடுகளும் எத்தகைய ஆயுதங்களை ஐரோப்பாவில் வைக்கத் தீர்மானித்திருக்கின்றனவோ அதே போன்று சோவியத் ஆயுதங்களைக் கடல் பிரதேசங்களிலும், மாகடல் பிரதேசங்களிலும் நிறுத்தி வைப்பதென்பது சோவியத் யூனியனின் பதில் நடவடிக்கைகளில் ஒன்று. சோவியத் யூனியனின் பந்தோபஸ்துக்கும் மற்ற சோஷலிஸ நாடுகளின் பந்தோபஸ்துக்கும் தேவையான மற்ற நடவடிக்கைகளும் எடுக்கப்படும்'' என்றும் யூரி அந்ரபோவ் வற்புறுத்தினர்.

''மனித விவேகத்தினுல் மட்டுமே அணு ஆயுதப் பேரழிவிலிருந்து இவ்வுலகைக் காப்பாற்றமுடியும். அந்த விவேகம் வெற்றிபெறவேண்டும்; மனிதகுலம் காப்பாற்றப்படவேண்டும்'' என்று யூரி அந்ரபோவ் கூறினர்.

## மழை வேண்டி பிரார்த்தனை

(மன்னூர்)

மன்னூர் மாவட்டத்தில் மழை பெய்ய வேண்டுமென திருக்கேதீஸ்வரப் பகுதியில் பிரார்த்தனையும் கஞ்சி வார்ப்பும் இடம் பெற்றது.

இதேபோல் மன்னூர் மாவட்டத்தின் பல பகுதிகளிலும் கொடும்பாவி இழுப்பு பிரார்த்தனை கஞ்சிவார்ப்பு என்பன இடம் பெற்று வருகிறது. இருப்பினும் இதுவரை மன்னூர் மாவட்டத்தில் போதிய மழை பெய்யவில்லை.

## வெற்றி – தோல்வி இல்லை!

(கொழும்பு)

இலங்கைக் கோஷ்டிக்கும், சிம்பாவ்வே கிரிக்கெட் கோஷ்டிக்குமிடையில் கொழும்பில் நடைபெற்ற உத்தியோகப்பற்றற்ற நான்குநாள் கிரிக்கெட் போட்டி வெற்றி-தோல்வியின்றி முடிவடைந்தது. (வி)

## யாருடைய மீன்வலை

ஊர்காவற்றுறை கரம்பனைச் சேர்ந்த திரு ச. பிரகதீஸ்வரன் என்பவர் ஊர்காவற்றுறை யாழ்ப்பாணம் வீதியில் ஒரு மீன்பிடி வலையைக் கண்டு எடுத்து ஈழநாடு காரியாலயத்தில் ஒப்படைத்துள்ளார். உரியவர் தகுந்த அத்தாட்சி காட்டி காரியாலய நேரத்தில் பெற்றுக்கொள்ளவும்.

## மணிவாக்கு

அரசியலில் ஆன்மீகமணம் கமழப்பெற வேண்டும்.
—கோபாலகிருஷ்ணகோகலே

# நமது நோக்கு

## யாழ்ப்பாணத்தின் தொழில் வளம்

தென்னிலங்கை மக்கள், அரசாங்க பிரமுகர்கள், அமைச்சர்கள் போன்ற சிங்களப் பெருமக்கள் இங்கு வரும்போது யாழ்ப்பாணத்தின் கல்வி, விவசாயம், கூட்டுறவு போன்ற துறைகளில் யாழ்ப்பாணம் நாட்டுக்கு நல்லெடுத்துக்காட்டாக அமைகின்றதென்று பாராட்டுவது நெடுங்கால வழக்கமாயிருந்தது.

இந்தப் பாராட்டுக்கும் இத்துறைகளில் இன்று காணப்படும் பிற்போக்குக்கும் ஏதும் தொடர்புண்டா என்பது அரசியல் கேள்வி மட்டுமல்ல; எங்கள் பொருளாதார சமூதாய தேக்க நிலையையும் அதற்கு இப்பகுதி மக்களின் அசமந்தப் போக்கையும் குறிப்பிடுகின்றது.

தோட்டவிவசாயம் குன்றியிருப்பதற்கு இன்றைய கட்டுப்பாடற்ற பொருளாதாரம் ஒரு முக்கிய காரணம் கல்வியின் சீர்குலைவு பெரிய விடயம், அதனை விரிப்பது இங்கு பொருத்தமில்லை.

யாழ்ப்பாணப் பாடசாலைகள், இங்குள்ள 'கறுத்தக் கொழும்பான்' மாம்பழம் போல மிகச் சுவையாக இருந்த காலம் அண்மையில் மறையத் தொடங்கியது. முற்றாக மறையுமென்றில்லை எழுச்சிக்கு இம்மாவட்டம் அரசியல்சுயநிர்ணய அமைப்பில் இயங்கவேண்டியது அவசியம். சுயநிர்ணயம் என்றால் ஒருமந்திரமல்ல அதுவும் திறம்படச் செயற்படவேண்டும்.

''எங்கள் பாடசாலைகள், எங்கள் தேவைகள், எங்கள் கலாசாரம், எங்கள் பண்பு'' என்ற சமூக உணர்வு, கல்வி நிர்வாகத்திலும், பெற்றோர் மாணவரிலும் சமுதாயத்தில் பரவலாகவும் செறிந்து மறுமலர்ச்சி ஏற்படுத்தவேண்டும்.

இன்றைய குறைகளெல்லாவற்றிற்கும் ஆட்சியின் அநீதிதான் பொறுப்பென்றுமுடிவு கட்டுவது தவறு. எங்கள் அரசியல் தானும் எத்தனை பாடசாலைகளைப் பழுதாக்கிவிட்டது. அரசியல் தலையீடு எந்தவிதத்திலும் நன்மை பயிக்காது. சான்றோர் சமூகம் கல்விக்கு சாதகமாயிருத்தல் அவசியம்.

கூட்டுறவுத் துறையிலும் நாம் பழமையையே பேச வேண்டியிருக்கிறது. அகில இலங்கையிலும் புகழ்பெற்ற கூட்டுறவுத் தந்தை அமரர் வீரசிங்கத்தின் புகழ்பாடும் போது. இன்றையநிலை எவ்வாறிருக்கிறது? அங்கும் ஏமாற்றமே!

யாழ்ப்பாணத்தின் பழமை பேசுவதானால், சங்க நூல்களிலும் பிற்காலத்துப் பெருநூல்களிலும் பேசப்படுவதை நாம் படித்துக் காலங்கழிக்கலாமே!

சோழநாட்டுக்கும் ஈழநாட்டுக்கும் இருந்தவாணிக உறவு பட்டினப் பாலையில் குறிக்கப்படுகின்றது. ''ஈழத்து உணவும் காழகத்து ஆக்கமும்'' வந்திறங்கிய பண்டங்களென்று பாட்டுக் கூறுகின்றது. மலையாள நாட்டிற்கும் ஈழநாட்டிற்கும் பலவகையான தொடர்பிருந்தது.

இதனை விரிப்பது அவசியமில்லை; ஆபத்தானதுங்கூட. இன்று ''ஈழநாடு'' என்ற சொல் தமிழ் மக்களுக்கும்- ஏன் எங்கள் பத்திரிகைக்கும் - நினைக்க முடிக்கும் அபாயங்களை வரவழைக்க வல்லது.

இந்தியா மட்டுமல்ல, ரோமாபுரி, கிரேக்க நாடுகளுக்கும் தமிழ் மக்களின்- யாழ்ப்பாணத்தவரின் தொழிற்படைப்புகள் ஏற்றுமதிசெய்யப்பட்டு வாணிகம் சிறப்புற்றிருந்ததென்று வரலாறு குறிப்பிடுகின்றது.

இன்று இந்த இக்கட்டான நிலையிலும் யாழ்ப்பாணம் இத்தாலிய சந்தைப்படுத்தும் குழுவினரை ஈர்த்திருக்கிற செய்தி படித்து மகிழ்ச்சியடையாத தமிழன் உண்டா? இதற்கு நாம் வதிரிக் கிராமத்தைப் பாராட்ட வேண்டும்.

வதிரி பல சிறந்த சமுதாயப் பணிகளுக்குப் பேர் போனது. அது யாழ்ப்பாணத்தின் பண்டைய மகிமையைப் புனரமைக்கின்றது; முன்னேற்ற வழி காட்டுகின்றது.

இன்று யாழ்ப்பாணத்தில் உற்பத்தியாகும்பண்டங்கள் பற்றி இவ்வாரம் பாராளுமன்றத்தில் பிரஸ்தாபிக்கப் பட்டது. ஒன்று பயங்கரவாதம்; மற்றது சாதிக் குழப்பங்கள். இவை தென்னிலங்கை நோயாளிகளுக்கு வழங்கப்படும் (repeat குளிகைகள். பாராளுமன்றத்துக்கு வெளியிலிருந்து கேள்விப்படும் மூன்றுவது உற்பத்திப் பொருளே வதிரியின் பாதணிகள்!

வதிரிக் கிராமத்தையும் அதன் அச்சாணியாக விளங்கும் தேவரயாளி இந்துக் கல்லூரியையும், இன்று திறம்பட இயங்கும் பரமானந்த ஆச்சிரமத்தையும் பார்த்த கண்கள், தமிழ் மக்களின் தொழிற்திறமை, சாதி மத மாறுபாடற்ற சைவவாழ்வு, முன்னேற்றத்திற்கு உதவும் கல்வி, வயோதிபரை, நிக்கற்றவரைப் பேணும் பரோபகாரம் - இவற்றையே காணும்.

இன்று யாழ்ப்பாணப் பிரதேசத்தின் எழுச்சிக்குத் தொழில்வளம் வேகமாக வளரவேண்டியது. ஜனப்பெருக்கம், அரசியல் பிணக்கால் பெருகிவரும் வேலையின்மை, குறைவுடையகல்வி வசதிகள், சமுதாயத் தன்னிறைவுக்குரியபொருள் வளமின்மைஇவற்றையெல்லாம் திருத்தியடையும் தொழில் துறையே சமாளிக்கமுடியும். அரசு இங்கு நடத்தும் சீமெந்து, உப்பு போன்ற கூட்டுத்தாபனங்கள் அல்ல. சிறு தொழில்கள், குடிசைக் கைத் தொழில்கள், சுய வேலைவாய்ப்பளிக்கும் பல விதத் தொழில் நுட்பம் தேவைப்படும் கைத்தொழில்கள், கூட்டுறவுத் தொழில்கள் இன்று எமக்குத் தவிர்க்கமுடியாத தேவை.

கட்டுப்பாடற்ற பொருளாதாரம் இவற்றிற்கெல்லாம் முட்டுக்கட்டை என்பது தெரிந்ததே. இதனையும் முறியடித்த வதிரிக் கிராமத்தின் வீரச்செயல் சுவிற்சர்லாந்திலுள்ள ஒவ்வொரு சிறு கடையிலும், வீட்டிலும் நடைபெறும் மணிக்கூட்டுத் தொழிலை நினைவூட்டுகிறது.

சர்வகட்சி மகாநாட்டைக் காத்திராமல் யாழ்ப்பாணத்தின் தொழில் வளத்தைப் பெருக்க வல்லவர்களனைவரும் முன்வருவதே சுயநிர்ணயத்திற்கு அர்த்தம் அளிக்கும் செயல்.

# நீங்களும் பண்டிதர் ஆகலாம்

'கண்டது கற்கப் பண்டிதன் ஆவான்' என்பது நாடோடிப் பழமொழி. கண்ணிற் கண்டனவற்றையெல்லாம் படிக்கப் படிக்க அறிவு வளரும்; பண்டிதனும் ஆகலாம் என்பது அப் பழமொழியின் பொதுவான கருத்து. ஆனால் அப் பழமொழிக்கு ஆழமான மற்றொரு கருத்தும் உண்டு. கண்டது - தரிசனம்! சான்றோர் கண்ட அறிவுத் தரிசனம்! சான்றோர் கண்ட காட்சிகளே நூல்வடிவில் வந்துள்ளவை; இன்னும் வரும், அவற்றையெல்லாம் கற்கக் கற்கக் அறிவுமிகுந்து பண்டிதன் ஆகிவிடலாம். இது தான் அப்பழமொழியின் ஆழமான கருத்து.

பரீட்சை எழுதினாற்றான் பண்டிதர் என்று எண்ணுதல் தவறு. பரீட்சை எடுக்காமலே அறிவுத்திறத்தினால் பண்டிதர்களாகவும் மகாவித்துவான்களாகவும், புலவர் சிகாமணிகளாகவும் போற்றப்பட்டவர் தமிழுலகிற் பலர். எனினும் நாட்டில் பரீட்சை எடுக்காமலும் எடுத்தும் சித்தியடையாமலும் திரியும் போலிப்பண்டிதர்களில் உளர். அவர்களைப் பற்றி நமக்கென்ன கவலை!

மறைந்த பண்டிதர் உயர்திரு ம. வே. மகாலிங்கசிவம் கோப்பாய் அரசினர் ஆசிரியப் பயிற்சிக்கழகத்தில் செந்தமிழ் கற்பித்த செம்மல்! அவரும் பரீட்சை எடுக்காத பண்டிதர்தான். ஆனால் அவர் ஒரு பெரும் மேதை; தமிழ், ஆரியம், ஆங்கிலம் மூன்றும் கற்றவர்- இயற்கைப்புலவர்: பெரும் பேச்சாளன்! நல்லாசிரியன் எங்கள் குரு. 'அவரைப்போல் இன்னும் பலர் இந்நாட்டில் தோன்றவேண்டும்.

யாழ்ப்பாணம் ஆரிய திராவிட பாஷாவிருத்திச் சங்கம். நல்லூர் ஆதீனத்தின் உதவியுடன் நடத்தும் காவிய வகுப்பில் கலந்து எவரும் கற்கலாம். இளைஞர் முதியர் என்று பாராது எவரும் வகுப்பிற் சேர்ந்து கற்கவேண்டும் என்பதும் எமது நோக்கம். யாழ்ப்பாணக் குடாநாட்டின் தலைசிறந்த படிப்பாளிகள் (புலவர்கள், வித்துவான்கள், பண்டிதர்கள் பி ஏ, எம். ஏ. பட்டதாரிகள்) வகுப்புகளை நடத்த விருப்புடன் முன்வந்துள்ளனர். இடவசதி கருதி நல்லூர் மங்கையர்க்கரசி மகளிர் வித்தியாலயத்திலும் சில வகுப்புகள் நடைபெறும்.

''அறிவை வளர்த்திடல் வேண்டும் - மக்கள்
அத்தனைபேருக்கும் ஒன்றாய்''
— மகாகவி பாரதியார்.

படிக்கலாம்! இலக்கியச்சுவை
பருகலாம்! அறிவும்பெறலாம்!
பட்டமும் பெறலாம்!
சேரவாருங்கள் செகத்தீரே!

வித்துவான்
சி. ஆறுமுகம்.
[சங்கச் சார்பில்]

# கிளிநொச்சியில் அகதிகட்கு கூட்டு விவசாயப் பண்ணை!

(கிளிநொச்சி)

கிளிநொச்சி, யாழ்ப்பாணம் ஆகிய மாவட்டங்களில் தஞ்சமடைந்துள்ள அகதிகளின் புனர்வாழ்வை நோக்கமாகக் கொண்டு கூட்டு விவசாயப் பண்ணை ஒன்று கிளிநொச்சியில் உள்ள கோணாவில் கிராமத்தில் அமையவுள்ளது.

இதற்கான ஏற்பாடுகளை உருத்திரபுரம் காந்தி சேவா சங்க சார்பில் பிரஸ்தாப சங்க பிரமுகரும் காந்தீய வாதியுமாகிய திரு. எஸ். கே. வேலாயுதபிள்ளை செய்துவருகிறார்.

காந்தி சேவா சங்கத்திற்குச் சொந்தமான 300 ஏக்கர் காணி கோணாவில் கிராமத்தில் உள்ளது. இக்காணியை அரை ஏக்கர் வீதம் பிரித்து சுமார் 500 குடும்பங்களிற்கு ஒப்பந்த அடிப்படையில் வழங்கப்படும். இவ் 500 குடும்பங்களிற்கும் கூட்டுப்பண்ணையில் வேலைவாய்ப்பளிக்கப்படும். பல கைத்தொழில் முயற்சிகளும் இங்கு மேற்கொள்ளப்படும்.

இக்கூட்டுப்பண்ணையில் பாலர்பாடசாலை, சிறுவர் பராமரிப்பு நிலையம், வைத்திய நிலையம், கூட்டுறவுக்கடைகள் ஆகியன நிறுவவும் உத்தேசிக்கப்பட்டுள்ளது. குடும்பத்திற்கொரு வீடும் கட்டிக் கொடுக்கவும் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

சைவ உணவு உண்போரும் காந்தியக் கொள்கைகளை கடைப் பிடிப்போருக்கும், ஒழுக்க நெறிகளை பேணுவோருக்கும் இப்பண்ணைத் திட்டத்தில்முன் உரிமைஅளிக்கப்படும்.

உருத்திரபுரம் காந்திசேவா சங்க மண்டபத்தில் தஞ்சமடைந்துள்ளசுமார்100குடும்பங்கள் கோணாவிலில் உள்ள இச் சங்கத்திற்கு சொந்தமான கூட்டுப்பண்ணை அமையவுள்ள காணிக்கு இடமாற்றம்செய்யப்பட்டுள்ளது. இவர்களும் இத்திட்டத்தில் சேர்த்துக் கொள்ளப்படுவார்கள்.

பண்ணை அகதி முகாமிலிருந்து 25 குடும்பங்கள் இக் கூட்டுப்பண்ணைத் திட்டத்தில் சேரமுன்வந்துள்ளன.

இதே போல பாதிக்கட்டு அகதிகளாக முகாம்களில் தஞ்சமடைந்துள்ளோர் இப்பண்ணைத்திட்ட நடைமுறைகளை அனுசரித்து நடக்கக்கூடியவர்களாக இருப்பின் இக்கூட்டுப் பண்ணையில் சேர்த்துக்கொள்ளப்படுவார்கள்.

மேற்கண்டவாறு இக்கூட்டுப் பண்ணையின் நடைமுறைகள் பற்றி பண்ணைத்திட்டநிர்வாகி திரு. வேலாயுதபிள்ளை தெரிவித்தார்.

## "திருவாதவூராரின்வாழ்க்கை நமக்கு வழிகாட்டுகிறது"

(மட்டுவில்)

''இறைவன் தொண்டிற்கும், மக்கள் தொண்டிற்கும் தம்மை அர்ப்பணித்துக் கொண்ட எந்த ஒரு மனிதனுக்கும் வயதோ, குடும்பத் தொல்லையோ, அவரின் உத்தியோகமோ தடையாக இருப்பதில்லை என்பதை திருவாதவூரடிகளாரின் வாழ்க்கைவரலாறு எமக்கு எடுத்துணர்த்துகிறது''.

இவ்வாறு சாவகச்சேரி வடக்கு வாணன்புலம் முருகன் ஆலய முன்றலில் நடைபெற்ற திருவாசகவிழாவில் சிறப்புரை வழங்கிய மட்டுவில் மகாவித்தியாலய அதிபர் திரு. தா. காசிநாதன் கூறினர்.

இசையரசு சி. விஞசித்தம்பி தலைமையில்விழா ஆரம்பமானது பண்டிதர்கனகசபாபதி உட்பட பலர்பேசினர். இசைமணி பூமணி இராஜரத்தினம் பண்ணுடன் திருவாசகம் ஓதினர். அதிபர்காசிநாதன் தொடர்ந்து பேசியதாவது:

''மணிவாசகர் சைவத்திற்கு மட்டும் தொண்டு செய்யவில்லை. தமிழ் வளர்ச்சிக்கும் பாரிய தொண்டைச் செய்துள்ளார். இன்று தமிழையும், சமயத்தையும் வளர்த்துவரும் நூல்கள் வரிசையிலே திருவாசகம், திருக்குறள், கம்பராமாயணம் ஆகியவற்றைக் கூறலாம். திருக்குறள் பல்வேறு மொழிகளில் அகில உலகிலும் மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. அதேபோன்று திருவாசகமும் மொழி பெயர்க்கப்பட்டுள்ளது என்றால் திருவாசகத்தின் மகிமையை நாம் கூறவும் வேண்டுமா?'' என்றார்.

## கிளிநொச்சிச் சந்தைக்கான ரூ. 10 லட்சம் கட்டடம் பயனற்றுக்கிடக்கிறது!

(கிளிநொச்சி நிருபர் கே. வி.கே. திருலோகமூர்த்தி)

கடந்த அரசு காலத்தில் பல லட்சம் ரூபா செலவில் கட்டப்பட்ட புதிய சந்தைக் கட்டிடத்தில் 1977-ம் ஆண்டு முதல் தஞ்சமடைந்திருந்த மலையகத்தைச் சேர்ந்த அகதிகள் வெளியேற்றப் பட்டுவிட்டனர்.

இவ்வகதிகள் வெளியேறி பல மாதங்களாகியும் புதிய சந்தையை ஏன் ஆரம்பிக்கவில்லை என்ற கேள்வி வரியிறுப்பாளர் மத்தியிலும் ஏனைய பொதுமக்கள் மத்தியிலும் எழுந்துள்ளது.

கிளிநொச்சியின் தற்போதைய சந்தை மிகவும் வசதி குறைந்த நிலையில் காணப்படுவதுடன் மழைகாலத்தில் சேறும் சகதியுமாக மக்கள் நடமாடமுடியாத நிலையில் உள்ளது.

அத்துடன் வியாபாரிகள் இடநெருக்கடி காரணமாக வீதிகளிலும் றெட்றிக்கோ விளையாட்டரங்கிலும் தமது வர்த்தக முயற்சிகளை மேற்கொள்கின்றனர். இதனால் வாகனப்போக்குவரத்திற்கும் இடைஞ்சல் ஏற்படுவதுடன் விளையாட்டு மைதானத்தையும் முழுமையாகப் பயன்படுத்தமுடியாத நிலையும் உருவாகியுள்ளது.

## வெலிக்கடை சம்பவம்: சபையில் அநுரா குற்றச்சாட்டு

# நீதி அமைச்சரும் வெட்கப்படுகின்றார்!

(இ. சந்தசாமி)

வெலிக்கடைச் சிறைச்சாலையில் தமிழ் கைதிகள் கோரமாகக் கொலை செய்யப்பட்டது குறித்து நாம் எல்லாரும் வெட்கப்படத்தான் வேண்டும்! உந்த நாட்டுக்கு அபகீர்த்தியை வெளிநாட்டில் அது ஏற்படுத்தியிருப்பது உண்மைதான்!''

இவ்வாறு நேற்று முன்தினம் பாராளுமன்றத்தில் நீதி அமைச்சர் திரு நிஸங்கா விஜயரத்தின பேசுகையில் குறிப்பிட்டார்.

நீதி அமைச்சின் நிதி ஒதுக்கீடு குழுநிலை விவாதத்திற்குப் பதிலளித்துப் பேசுகையிலேயே அவர் மேற்கண்டவாறு சொன்னார்.

எதிர்க்கட்சித் தலைவர் திரு. அனுராபண்டாரநாயக்கா இந்தக் குழுநிலை விவாதத்தில் பங்கு பற்றிப் பேசுகையில், வெலிக்கடைச் சிறைச்சாலையில் தமிழ் கைதிகள் கண்டதுண்டமாக வெட்டிக் கோரக் கொலை செய்யப்பட்டது குறித்துமுழுச்சிங்கள இனமேவெட்கப்படவேண்டிய நிலையில் உள்ளதாகக் குற்றஞ் சுமத்தினர்.

அமைச்சர் திரு நிஸங்கா விஜயரத்தின, அனுராவின் கூற்றுக்குப் பதிலளிக்கும் வகையில், தமது பேச்சை நிகழ்த்தினர்

அவர் கூறியதாவது:-

வெலிக்கடைச் சிறைச்சாலையில், தமிழ்க்கைதிகள் கோரமாகக் கொலையுண்டது குறித்து விசாரணை நடாத்தப்பட்டது, அந்தச் சம்பவத்தை அதிகாரிகளினல் கட்டுப்மடுத்த முடியவில்லை. விசாரணையில் இந்தச்சம்பவத்துக்குப்பொறுப்பான எவரையும் கண்டுபிடிக்க முடியவில்லை. எதிர்காலத்தில் எவராவது குற்றவாளிகளாகக் கண்டுபிடிக்கப்பட்டால், அவர்களுக்குத் தண்டனை வழங்கப்படும்.

''மிஞ்சிய சிறைக்கைதிகள் பாதுகாப்பாக இருக்கவேண்டுமென்பதற்காகவே மட்டக்களப்புச் சிறைக்கு அனுப்பினேம். அங்கு அவர்களில்பலர் வெளியார் உதவியோடு தப்பிச் சென்று விட்டார்கள்.

''இந்த நாட்டில் நீதிச்சுதந்திரத்துக்கு எவ்வித பாதிப்பையும் அரசு ஏற்படுத்தவில்லை. நீதியரசர்களை அரசுடன் மோதவைப்பதற்கு எதிர்க்கட்சி தேவையில்லாமல் தூண்டிவிடுகிறது''.

## ரூ.3 3/4 லட்சம் கடத்தல் பொருள்கள் சிக்கின!

(புலோலி)

வல்வெட்டித்துறையிலுள்ள வீடொன்றில்வைத்து சுமார் 3,75 000 ரூபா பெறுமதியான ''ஸிப்பு''க்களைப் பொலிசார் கைப்பற்றி இருவரை கைது செய்தனர்.

காங்கேசன்துறை உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் திரு ரி. கே. ஜெயராசா, காங்கேசன்துறை தலைமைக்காரியாலய இன்ஸ்பெக்டர் திரு. சுபசிங்க, பருத்தித்துறை பொலிஸ் நிலையப்பொறுப்பதிகாரி திரு. கே. மகேந்திரன், சார்ஜன்ட் கிருஸ்ணலிங்கம், கான்ஸ்டபிள்களான சிவகுமார், பழனிவேல், விக்கினேஸ்வரன் ஆகியோருடங்கிய பொலிஸ் கோஷ்டியே இந்த ''ஸிப்புக்''களைக் கைப்பற்றியதுடன் இருவரையும் கைதுசெய்தது.

இலங்கையிலிருந்து கடத்திச் செல்வதற்கு ஆயத்தமாகப் பொதிகளாக வைக்கப்பட்டிருந்த இந்தஸிப்புக்கள் காங்கேசன்து‥ற சுங்கத்திணைக்களத்தினரிடம் ஒப்படைக்கப்பட்டது.

Ask Your
News Agents
Tomorrow for

CINTA

JOURNAL

16-12-83

- Some thoughts on Appapillai Amirthalingam
- All party parley: The Question of Prior Conditions.
- Victims of Black July '83
- Muslims' Fears
- National unity and Jaffna Train.

etc etc

(10564)

## திருகோணமலையில் தேசிய நூதனசாலை!

[திருகோணமலை]

திருகோணமலையிலுள்ள புதைபொருளாராய்ச்சி நூதனசாலையை, தேசிய நூதனசாலையாக மாற்றுவதற்கு கலாசார அமைச்சு முடிவுசெய்துள்ளது.

தேசிய நூதனசாலைத் திணைக்களத்திற்கு திருகோணமலை புதைபொருளாராய்ச்சி நூதனசாலை ஏற்கனவே கையளிக்கப்பட்டுவிட்டது.

தேசிய நூதனசாலைத் திணைக்களத்தின் இயக்குநர் டாக்டர் (திருமதி) தெல்மா குணவர்த்தன திருமலை நூதனசாலையைப் பொறுப்பேற்பது சம்பந்தமான வேலைகளை மேற்கொள்வார். (க)

## யாழ். செஞ்சிலுவைச் சங்க சேவைக்கு பாராட்டு

(மாவிட்டபுரம்)

''வன்செயல் சம்பவங்களால் பாதிக்கப்பட்டுவந்த மக்களுக்கு உடுபுடைவை வழங்கியும், மற்றும் பல உதவிகளையும் வழங்கி அவர்கள் துயர் துடைக்க உதவிய யாழ் செஞ்சிலுவைச்சங்கத்தாரின் சேவை பாராட்டுக்குரியது.

இவ்வாறு இணுவில் சமாதான சபைத்தலைவர் திரு. தி. சி. சண்முகலிங்கம் சுன்ஞகம் இராமநாதன் கல்லூரியில் நடந்த வைபவத்தில் பேசுகையில் கூறினர்.

வலி-தெற்கு உதவி அரசாங்க அதிபர் பிரிவில் அகதிகளுக்கு செஞ்சிலுவைச் சங்கம் உடுபுடைவைகள் வழங்கிய வைபவத்தில் அவர் மேலும் பேசுகையில், காலம் அறிந்து சேவையாற்றிய யாழ். செஞ்சிலுவைச் சங்கத்துடன் இணைந்து வலி-தெற்கு உதவி அரசாங்க அதிபர் திரு. ஏ. சி செபநாயகம், கிராம சேவையாளர்கள், விசேட சேவை அதிகாரிகள் சேவையாற்றியமைக்கு எம்மக்கள் சார்பான பாராட்டுகளை தெரிவித்துக் கொள்கிறேன்'' என்றார்.

## மருந்து வாங்கக் காசில்லை என்று

## கணவன் கையை விரித்தார்

## இளம் மனைவி தற்கொலை!

(கிளிநொச்சி)

நோய்க்கு மருந்துவேண்ட கணவன் காசுதரவில்லையே எனகவலை கொண்ட இளம் மனைவி ஒருவர் வாழ்வில் விரக்தி கொண்டு கிருமிநாசினி அருந்தி மரணத்தை தழுவிக்கொண்டார்.

தர்மபுரத்தை சேர்ந்த செல்லையா நல்லம்மா (25 வயது) என்பவரே மரணத்தை தழுவிக்கொண்டவராவார். இம்மரணம் சம்பந்தமான விசாரணையை கிளிநொச்கிப்பகுதி மரண விசாரணை அதிகாரி முருகேசு யோகலிங்கம் கிளிநொச்சி ஆஸ்பத்திரியில் மேற்கொண்டார். சாட்சிகளை பொலிஸ் கான்ஸ்டபிள் எம். கணேசதுரை ஆஜர் செய்தார். மரணமானவரின் கணவர் செல்லையா, உறவினரான கன்னியம்மா ஆகியோரும் மரணவிசாரணையின் போது சாட்சியமளித்தனர்.

மரணமான நல்லம்மாவிற்கு இரத்தப்பெருக்கு நோய் இருந்தெனவும் மருந்தெடுக்கச் செல்வதற்கு கணவனிடம் காசுகேட்டதாகவும் அதற்கு கணவன் மறுக்கவே விரத்தி கொண்டு காணப்பட்ட பிரஸ்தாபமரணயானபெண், கிருமிநாசினியை அருந்திவிட்டு பேத்தியாரான கன்னியம்மாவிடம் மருந்து குடித்துவிட்டதாக தெரிவித்தாராம்.

இதைத்தொடர்ந்து கிளிநொச்சி ஆஸ்பத்திரிக்குஎடுத்து வரப்பட்டு சிகிச்சைக்குப் பின் மரணமானா' என சாட்சியங்களில் இருந்து தெரிய வந்தது மரணவிசாரணை அதிகாரி தற்கொலை என தீர்ப்பு வளங்கினர்.

## திருவெம்பாவை மனனப்போட்டி

(சுழிபுரம்)

திருவெம்பாவைப் பாடல்களை மனனம்செய்பவர்களுக்கு பரிசு வழங்கும் செயல்முறைத் திட்டம் ஒன்றை வழக்கம்பரை சனசமுக பஜனைச் சபையினர் செயல்படுத்தவுள்ளனர்.

''திருவெம்பாவைக் காலத்தில் பாடல்களை தினமும் ஒப்புவிக்கும் திட்டம் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. சகல பாடல்களையும் சொல்பவர்களுக்கு பரிசுகள் வழங்கப்படும். இப்போட்டியில் யாவரும்பங்கு கொள்ளலாம். மனனம் செய்யவர்கள் தினமும் வழக்கம்பரை அம்மன்கோவில் மாலைப் பூசையின்போது பாடல்களை ஒப்புவிக்கலாம்'' என்று பஜனைச் சபையினர் தெரிவித்துள்ளனர்.

### ஊருக்காக உழைத்தவருக்கு நினைவுச் சின்னம்

(பண்டத்தரிப்பு)

''சித்த வைத்தியத்துறையில் சிறந்து விளங்கியதுடன் அதற்காக அரசாங்கத்திடமிருந்து 'இராச வைத்தியர்' என்னும் சிறப்புப் பட்டத்தையும் பெற்ற அமரர் அ. க. குமாரசாமி அவர்கள் தமது ஊரின் முன்னேற்றத்திற்காகவும் பல சேவைகளைச்செய்தார். ஊருக்காக உழைத்த உத்தமருக்கு ஞாபகச்சின்னம் நிறுவமுறபட்டது பாராட்டுதற்குரியதாகும்''

இவ்வாறு யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் திரு. தேவநேசன் நேசையா வட்டுக்கோட்டை சிவன்கோவிலடி பொதுச்சந்தை மைதானத்தில் இடம்பெற்ற அமரர் 'இராச வைத்தியர். அ. க. குமாரசாமி ஞாபகார்த்த தூண் அடிக்கல் நாட்டும் வைபவத்தில் பிரதம அதிதியாகக் கலந்துகொண்டு உரையாற்றுகையில் குறிப்பிட்டார்.

திரு. வி. என். இராசரத்தினம் தலைமையில் நடைபெற்ற இவ்வைபவத்தில் ஞாபகார்த்த தூண் நிறுவுவதற்கான அடிக்கல்லை திரு தேவநேசன் நேசையா சம்பிரதாய முறைப்படி நாட்டி வைத்தார். வட்டுக்கோட்டை கிழக்கு கிராமோதய சபைத் தலைவர் சைவப்புலவர் திரு. நா. க. தங்கரத்தினம் உரையாற்றுகையில் குறிப்பிட்டதாவது:-

''இக்கிராமத்தின் முன்னேற்றத்தில் அதிக அக்கறை கொண்ட அமரர் குமாரசாமி பொதுநல இயக்கங்களுடன் இணைந்தும், தனியாகவும் பல சேவைகளைச் செய்து கிராம வளர்ச்சிக்காகப் பாடுபட்டவர். வைத்தியத்துறையிலும் சிறந்து விளங்கி சித்தவைத்தியத்தின் சிறப்புகளை நாடறியச் செய்த அன்னருக்கு நினைவுச்சின்னம் நிறுவுவது மிகவும் பொருத்தமானது. எமது எதிர்கால இளம் சந்ததி அன்னாரின் சேவைகளை உணரவும், பின்பற்றி வாழவும் இது போன்ற ஞாபகச்சின்னங்கள் உதவும்'' என்றார்.

இவ்வைபவத்தில் வட்டுக்கிழக்கு விசேட சேவை உத்தியோகத்தர் வே. த, கதிர்காமநாதன், உபதபால் அதிபர் ஐ சௌந்தரராசன், முன்னாள் விரிவுரையாளர் அ. அரியரத்தினம் ஆகியோர் உட்பட பலர் கலந்து கொண்டனர்

### பாம்பு தீண்டிய பெண்ணின் பரிதாபம்

(கிளிநொச்சி)

கணவனுடனும் பிள்ளைகளுடனும் ஆழ்ந்த நித்திரையிலிருந்த இளம் குடும்பப் பெண் பாம்பு தீண்டியதால் பரிதாபமாக ஸ்தலத்திலேயே மரணமானர்.

கிளிநொச்சி பொலிஸ் பிரிவைச் சேர்ந்த அனுச்சயன் குளம் என்னும் இடத்தில் வசித்துவந்த பாலச்சந்திரன் மனோன்மணி (28 வயது) என்பவரே மரணமானவராவார்.

## காக்கைதீவில்

## 31 வீடுகள் மட்டுமே; அதிலும் பிரச்னைகள்!

(பண்டத்தரிப்பு)

மானிப்பாய்த் தொகுதியிலுள்ள காக்கைதீவில் சுயஉதவி வீடமைப்புத்திட்டத்தின் கீழ் 50 வீடுகள் நிறுவுவதற்கு ஏற்கனவே திட்டமிருடிருந்தபோதிலும் தற்போது இங்கு 3 வீடுகள் மட்டுமே நிறுவப்படுகின்றது.

கட்டடப்பொருட்கள் சரிவர வழங்கப்படாததினலும், மண்கும்பான் மணல்ஏற்று…ற்கு தற்போது தடைவிதிக்கப்பட்டுள்ளதாலும் குறித்தகாலப் பகுதியில் இந்த 31 வீடுகளையும் கட்டிமுடிப்பதில் தடங்கல் ஏற்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

# குருமாற்றம்

## உங்களுக்கு எப்படி?

### மகரம்

மகர ராசிக்காரரர்களுக்கு இனிமேல் விரய ஸ்தானம எனப்படும் பன்னிரண்டாம் வீட்டில் வியாழ பகவான் பவனிவருவார். வீண் செலவுகளும், கடன் தொல்லைகளும் மனவேதனையைத் தரலாம். தொல்லைகளை விலைக்கு வாங்குவதைத் தவிர்க்கவும். இடமாற்றம், ஆரோக்கியம் கெடுதல், இதனால் வைத்தியச் செலவுகள் அதிகரித்தல், திருடர் பயம், இனசன விரோதம், வாக்குவாதங்கள், புத்திரர்களால் தேவையற்ற பிரச்னைகள் என்பன காட்டும். வெளிநாடுகளில் தொழில் வாய்ப்பு பெறும் வாஞ்சையால் சிலர் முன்கூட்டியே பணத்தைக் கொடுத்துவிட்டு, கடைசியில் வேலையுமில்லை, பணமுமில்லாமல் ஏமாற்றப்படுதல் ஆகிய அனுதாபத்திற்குரிய விடயங்களும் நடக்கலாம். நம்பி நடக்காது நம்ப நடப்பது இவ்விராசி நேயர்களுக்கு அவசியமானது. இவர்கள் எதிலும் அவசரப்படாமல் சற்று நிதானமாக நடப்பது நல்லது. தெய்வ வழிபாடு நன்மை பயக்கும். உத்தியோகத்தர்களுக்கு ஆரோக்கியம் அடிக்கடி பாதிப்படைவதனால் வேலைபார்க்கும் இடத்திற்கு ஒழுங்காய் போக முடியாதிருத்தல், வேலைப்பளு கூடுதல், திடீர் வேலைநீக்கம் பெறுதல் என்பன உண்டாம். மாணவர்களுக்கு சோம்பல் தன்மை, சுகயீனங்கள், பாடசாலைக்கு ஒழுங்காய்ப்போய் கல்வி கற்க முடியாதிருத்தல், பரீட்சைகளில் தோற்றமுடியாது அவதிப்படல், அதிக மறதி என்பன உண்டாம். வர்த்தகர்கள் வீண் பிரச்னைகளில் சிக்குண்டு வியாபார நிலையத்தை மூடிவிடுதல், ஆரோக்கியம் பாதித்தல் ஆகியனவாம். பெண்மணிக்கு வாழ்வில் நிம்மதிக் குறைவு, குடும்ப சௌஜன்யம் கெடுதல், நற்சுகமின்மை, தீயவர்களால் தொல்லைகள், அவமானங்கள், ஏமாற்றங்கள் ஏற்பட இடமுண்டாகலாம். விவசாயிகளுக்கு விவசாயம் சீர்கெடல், பொருள் நஷ்டம், கடன்தொல்லைகள் முதலியனவைகளாம்.

### கும்பம்

கும்ப ராசியாளருக்கு 17-12-83 தொடக்கம் ஒரு வருடம் வரை இனி யோக காலம். வியாழ மாற்றம் நற்பலன்களை அளிக்கும். வியாழன் பதினோராம் இடமாகிய லாபஸ்தானத்தில் பவனிவருவார். இதுவரை பட்ட கஷ்டம் நீங்கும். சமுதாயத்தில் கௌரவமாகவும் மரியாதையாகவும் தலைநிமிர்ந்து வாழ இவ்வியாழ பகவான் வழிசெய்வார். இல்லத்தில் சுபகருமச் செயல்கள் நடைபெறும். குடும்ப சந்தோஷம், புதிய மனைப்பிரவேசம், பூமியால் நன்மை, புத்திரரால் சிறப்படைதல், செய்தொழில்கள் விருத்தியாகுதல், தாராளமான பணவருவாய், கொடுக்கல் வாங்கல்கள் சிறப்பு, ஆரோக்கியம் சீராகுதல், தொழில்நியமித்தம் அன்னிய இடங்களுக்குச்செல்லுதல்முதலிய நன்மைகள் நடைபெறும். பொதுவாக இந்த ராசி நேயர்கள் அஷ்ட ஐசுவரியங்களையும் இந்த ஒரு வருடமும் அனுபவிப்பார்கள். உத்தியோகத்துறையிலுள்ளோருக்கு இனிமேல் நல்ல வாய்ப்பான காலம் ஆகும். தொழிலில் உற்சாகம் காட்டுவார்கள், மேலதிகாரிகளின் நல்லாதரவும், பொதுமக்களின் நன்மதிப்பும் கிட்டும். வருமானம் அதிகரிக்கும். இவர்கள் குடும்பத்தில் சந்தோஷம் நிலவும். மாணவர்கள் கல்வியில் அக்கறை காண்பிப்பர். பரீட்சைகளில் மகத்தான சித்திகள் பெற்று முன்னணியில் திகழுவார்கள். மேற்படிப்பைத் தொடர அன்னிய இடங்களுக்குச் செல்ல வசதிகள் வாய்ப்புக்கள் வரும். வியாபாரிகளைப் பொறுத்தளவு வியாபாரத்தில் முன்னேற்றம் அடைதல், தொழிலாளர்கள் புதிய உற்சாகத்துடனும் நம்பிக்கையுடனும் உண்மையாக, நேர்மையாக, ஒற்றுமையாக உழைத்து முதலாளியையும் ஸ்தாபனத்தையும் மேன்மையான நிலை அடையச்செய்வர். வேறு புதிய தொழில்களை ஆரம்பித்து புதிய ஸ்தாபனங்களை அமைத்து பலருக்கும் தொழில் கொடுத்தல் சினேகிதர்களால் நன்மையடைதல். ஆகியன வந்துசேரும். பெண்மணிகள் குடும்பத்தில் உற்சாகத்துடன் விளங்குவர். எல்லா நல்ல வசதிகளையும் அனுபவிப்பர், விவாகப்பேறு, பண வருவாய் அதிகரித்தல். இல்லத்தில் பல நன்மையான காரியங்கள் முதலிய நடக்கும். கமக்காரர்களுக்குத் தோட்டங்களாலும், வயல்களாலும் நல்ல ஆதாயம், முன்னேற்றம் உண்டு. பூமிப் பலிதம் போன்ற சொத்துச் சேர்க்கையும் காணப்படும். இந்த ராசியில் பிறந்தோர் இனி நல்ல காலம்தானே என்று நிதானம் தப்பி நடக்கக்கூடாது எப்படியும் வாழலாம் என்று நினையாமல், இப்படித்தான் வழாவேண்டும் என்று நன்னெறிகளைக் கடைப்பிடித்து ஒழுகுதல்வேண்டும்.

### மீனம்

மீனராசியாளருக்கு குருபகவான் பத்தாம் வீட்டிற்கு வருகிறார். இவ் வீடு சோதிட சாஸ்திரப்படி கர்மஸ்தானம் தொழில்ஸ்தானம் என்றுகூறப்படும். இந்த ராசியில் பிறந்தோருக்கு இப்பொழுது அட்டமத்துசனி காலமும் நடைபெறுகிறது. ''பத்தில் வியாழன் பதியைவிட்டுக் கிளப்பும்'' என்று கூறுவர். தொழில்ஸ்தானம் என்று கூறப்படும் பத்தாம் வீடாகிய கர்மத்தானத்தில் குரு சஞ்சரிக்கும் காலத்தில் உத்தியோக நிலையங்களில் எதிர்ப்புகள் உண்டாகும் தொழில்மாற்றம் அல்லது தொழில் நிறுத்தம்காட்டலாம் வாழ்க்கையில் அனேகமாற்றங்கள் ஏற்படும். ஆரோக்கியம் குன்றுதல், தேச சஞ்சாரம், விபத்துக்களினால் மரணம் ஏற்படல், சத்திரசிகிச்சை போன்ற கஷ்டங்கள், உற்றார், உறவினர், புத்திரர்கள் என்பவர்களின் மறைவினால் மனச்சோர்வு அடைதல், தொழில் காரணமாக பிற இடங்கள் போகும்போது அவமானப் படக்கூடியசம்பவங்கள் நடத்தல், மனநிலை ஒருவழி நில்லாது பேதலித்தல், ஞாபக சக்திகுறைதல்முதலியனவாம். உத்தியோகத்தர்கள் மேலதிகாரிகளின் ஒத்துழைப்பு இன்மையால் கஷ்டப்படுதல், மனவேதனைகளால் அல்லது பாதகமான சூழ்நிலைகளால் தொழில் இடங்களுக்குப் போகமுடியாதிருப்பதன் காரணமாக அல்லது அவர்களின் எச்சரிக்கையை அலட்சியம் செய்வதனால் தொழில் நீக்கம் ஏற்படல் வருமானக்குறைவினால் குடும்பத்தில் பிணக்குகள் ஆகியன தோன்றலாம். நிதானமாக நடப்பவர்கள் பிரச்னைகளைச் சமாளித்து வாழ்வில் வெற்றிபெறுவர். மாணவர்களுக்கு மனச்சோர்வு, தேகாரோக்கியம்குறைதல், பரீட்சைகளில் சித்திக்குறைவு சஞ்சலமனம் என்பன இருக்கும். வீண் கவலைகளை ஒழித்து கல்வியில் கண்ணும் கருத்துமாயிருந்தால் சம முன்னேற்றமடையலாம். வியாழபகவானுக்குப் பிரீதிசெய்துவருக. பெண்மணிகள் வாழ்க்கையில் மனத்தைரியம் இழத்தல், இடமாற்ற யோசனைகள், குடும்பத்தில் துக்கசம்பவங்கள் நிகழ்தல், வசதியோடு வாழக்கொடுத்துவைக்கவில்லையே என்று ஏங்குதல், சிலருக்கு சத்திரசிகிச்சை போன்றவற்றினால் அச்சம் உண்டாதல் போன்றன ஏற்படலாம், குரு பிரீதியாக புஷ்பராகக் கல் பதித்தமோதிரம் அணிவது பலனளிக்கும். வியாபாரிகள் தங்கள்தொழிலையும் மாற்றியமைக்க நினைப்பார்கள். வியாபார நிலையத்தையும் மாற்றி வேறு இடத்தில் போய் வர்த்தகம் செய்ய யோசிப்பார்கள், மனம் ஒரு வழிப்படாததால் வியாபாரத்தில் நஷ்டமடைவர், அதோடு தொழிலாளர் பகையும் வளர்ந்து வருவதைக்கண்டு வேதனையுறுவர், கமக்காரர்களுக்கு பயிர்ச்செய்கையில் லாபம் குறையும், இதனால் மனதில் உற்சாகமின்றி காணப்படுவர். கடன் தொல்லைகளும், குடும்பக்கஷ்டங்களும், குடும்பத்தில் துக்கசம்பவங்களும் விவசாயிகளை வாட்டும். வியாழனுக்குப் பிரீதியும், சனீஸ்வரனுக்குப் பிரீதியும் செய்து வருதல் நன்று.

சி. நவரத்தினம்

(ஆனைக்கோட்டை)

---

மீனம் வியாழனின் ஆட்சி வீடு. இந்த வீட்டில் சந்திரனே இருக்கப் பிறந்தவர்கள் குருசந்திர யோகத்திற்குச் சமமான நற்பலன்களை அனுபவிப்பர். இவர்களிடம் யோக்கியம் அன்பு, அழகு, ஆசாரம் நற்குணம், நன்னடத்தை ஆகியன காணப்படும். இவர்கள் அதிஷ்டசாலிகள் வியாழன், சந்திரன் மகாதெசைகளில் யோகமான நற்பலன்கள் நிறைந்த வாழ்வு வாழ்வர். தமது பிற்கால வயதில் சிறப்பாக வாழ்வர்.

''பொன்னவன் ஜன்மந் தன்னிற் பொருந்திய மூன்றினுள் இல், வின்னமா றெட்டிற்பதில் விளங்குபன் னிரண்டி னின்றால், தன்னுடன் பிறந்தார் சுற்றந் தானிய மாடு மக்கள், வின்னமாம் பதியும் விட்டு வெறுப்பதா யிருக்குந் தானே''.

குரு பகவான் (வியாழன்)சந்திர ராசிக்கு 1,3,4,5 6,8,10, 12 ஆகிய ராசிகளில் வரும் காலத்தில் குரு வேதை என்று சொல்லப்படும். இவ்வாறு பாதிப்புக்குள்ளாவோர் தெட்சணாமூர்த்திக்குத் தத்தம் இயல்புக்கேற்றவாறு அபிஷேக ஆராதனை, சந்தனக் காப்புச் சாத்தல், அவருக்கு விருப்பமானவற்றைப் படைத்து அர்ச்சனைசெய்து வழிபட்டுவந்தால் வியாழதோஷம் நீங்கி நன்மை பெறுவார்கள்.

சைவ சமயத்தவர்கள் குரு பகவானது தோஷத்திற்கு தெட்சணாமூர்த்தியையும் வைஷ்ணவர்கள் நாராயணமூர்த்தியையும் வழிபடுகின்றனர். இம்முறை வியாழமாற்ற தினத்தில் எல்லாச் சைவசமய மக்களும் காலையில் எழுந்து ஆசாரமுறைப்படி ஆலயங்களுக்குச்சென்றுசுவாமிதரிசனம் செய்வதினால் விஷேச நன்மைகள் கிட்டும். அன்றுதெட்சணாமூர்த்திக்கு அபிஷேகம் செய்தல், சந்தனக்காப்பு சாத்துதல், மஞ்சள், பட்டுச்சாத்தி முல்லைப்புஷ்பத்தினாலும், மஞ்சள் நிறப்பூவினாலும் அர்ச்சனை செய்தல் நன்று இதேபோல சிவன், அம்மன் நவக்கிரகங்கட்கும் அபிஷேக ஆராதனைகள் அன்று செய்யலாம். சிவனுக்கும் அம்மனுக்கும் நவக்கிரக கூடத்திலுள்ள வியாழனுக்கும் மஞ்சள் பட்டு வாங்கிச் சாத்தி வழிபடலாம். வீடுகளிலும் அன்றையதினம் தூபதீப வழிபாடுகள் செய்தல்லட்சுமி கடாட்சம் கிடைக்கும்.

மேட, மிதுன, சிங்க, கும்ப ராசியாளர்களுக்கு இந்த வியாழ மாற்றம் மிக விசேடமான நற்பலன்களை நல்கும். இந்த ராசிகளில் பிறந்தோர் புண்ணிய கருமங்களில் ஈடுபடுவர். புனித தீர்த்த, ஸ்தல யாத்திரைகள் மேற்கொள்வர், இவர்கட்கு தெய்வ சம்பத்து உண்டு, பொருள் வளம் கிட்டும். இடப, கர்க்கட, தனு மகர ராசி நேயர்களுக்கு வியாழ சுகம் போதாது. இக்கட்டுரையில் குறிப்பிட்ட பிரீதிகளைச்செய்துவர நன்மை உண்டாகும். கன்னி, துலாம், மீன ராசிக்காரர்களுக்கு இவ்வியாழ மாற்றத்தால் சமபலன் நடந்துவரும் வியாழ பிரீதிசெய்து வந்தால் நலம்.

திருநிரை மேன்மை சிறந்திடுஞ் சுகம் கல்யாணம், தருமிகு குலந்தழைக்கச் சந்தானம் பெருக்க மெய்தி, வருநிதி யாடைரத்தினம் வன்மையும் மருளுந்தேவ, குருவெனும் வியாழப் புத்தேன் குரைகழல் தலைகொள்வோமே. (முடிந்தது)

# இன்றைய பலன்

கார்த்திகை மாதம் 29-ம் திகதி வியாழக்கிழமை.

15-12-83

மேடம்: எடுத்தகாரியத்தில் தாமதம் ஏற்படலாம். செலவினங்கள் அதிகரிக்கும். உஷ்ணரோகமும் ஏற்படலாம். அடக்கத்துடனும் நிதானத்துடனும் சுகாதாரமாகவும் நடந்துகொள்வது விரும்பத்தக்கது.

இடபம்: பேச்சுவன்மையால் பெரும்புகழ் கிடைக்கும் பெரியஇடத்துச்சாவகாசம்உங்களுக்கு செல்வாக்கைத் தேடித்தரும். வரவிலும் உயர்வுகாட்டும் அதிர்ஷ்டலாபத்திற்கும் இடமுண்டு.

மிதுனம்: நினைத்தது நடக்காது நிம்மதி பறக்கும் நெடும் பயணம் வேண்டாம். இதன் மூலம் பொருள் இவறக்கூடும். அதிக சிந்தனையை தவிர்த்து நடக்கவும்.

கடகம்: வாழ்க்கையில் நல்ல திருப்பம் ஏற்படும். தொழில் துறையில் நல்லமுன்னேற்றம் ஏற்படும். தாய்வழிச் சுகமும் உண்டு. எதிர்பாராத வரவுகளும் உண்டு.

எண்ணம்போல் வாள்வு இன்று மலரும் சிலருக்கு திடீர் திரவியலாபமுங்கிடைக்கலாம். புத்திரரால் புகழ்வந்து சேரும் உணர்ச்சிகரமான தினம்.

சிங்கம்: குடும்பத்தில்குறை கேட்கநேரிடும் சிலருக்கு விரக்த்திமனப்பான்மை தோன்றக்கூடும். கூர்மையான ஆயுதங்களுடன் பழகுபவர்கள் கவனமாக இருக்கவும்.

துலாம்: நலன்தரும் நிகழ்ச்சிகள் இடம்பெறும் குடும்பத்தில் மிக்கமகிழ்ச்சியுண்டு. காதலர்களுக்கு இன்று கனிவான தினம் பெரியோர்கள் ஆதரவும் கிடைக்கும்.

விருட்சிகம்: தொழில் முன்னேற்றம் இன்று தடைப்படும். ஆரம்பசூரத்தனம் ஆபத்தில் மாட்டிவைக்கும் செலவினங்கள் அதிகரிக்கும் முடிந்தவரை மௌனம் சாதிக்கவும்,

தனுசு: அன்புக்கரங்கள் அணைக்கும் அதிர்ஷ்டதேவதையின் பார்வையும் பதியலாம். தக்கசமயத்தில் தந்தையின் ஆதரவுகிடைக்கலாம், குருவின் உபதேசம் வாழ்க்கைக்கு வழிகாட்டியாக அமையும்.

மகரம்: முயற்சியால் உயர்ச்சியுண்டு. விவசாயிகள் வாழ்க்கையில் முன்னேற்றம் உண்டு. தொழிலிலும் நன்மையான மாற்றங்கள் உண்டு. கொள்வனவுகளில் நல்ல திருப்பம் ஏற்படலாம்.

கும்பம்: உண்மையான வழிநின்று உயர்வடைவீர்கள் மேலதிகாரிகளின் நம்பிக்கை உங்கள் மீதுபதியும் சகோதரப்பாசம் மேலோங்கி நிற்கும் கைத்தொழில் விருத்தியுண்டு.

மீனம்: பிரிவின்துயர் மனத்துயரத்தையுண்டுபண்ணும் எதிர்பாராதவிபத்திற்கு இடமேற்படலாம். ஆயுதபழக்கங்களை இன்றுதவிர்க்கவும் பொறுமையை பேணிநடக்கவும்.

சோதிடக்கலாநிதி

திருமலை

க. வேலுப்பிள்ளை

---

## இடமாற்றம்

(மன்னார்)

பண்டத்தரிப்பு அரசினர் கிராமிய வைத்தியசாலைப் பொறுப்பதிகாரியாகக் கடமையாற்றும் வைத்திய அதிகாரி டாக்டர் ஜி பதமஜெயன் ஜனவரி மாதம் முதல் மன்னார் அரசினர் ஆதார வைத்தியசாலைக்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார். கோப்பாய் அரசினர் வைத்தியசாலைப் பொறுப்பதிகாரியாகக் கடமையாற்றும் வைத்திய அதிகாரி திரு. என். அருள்லிங்கம் தலைமன்னார் அரசினர் வைத்தியசாலைக்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார்.

யாழ். மக்களுக்கோர் மகிழ்ச்சியான செய்தி

நீங்கள் வெளிநாடு செல்லவேண்டுமா?
உங்கள் பிரயாணச்சீட்டுக்களை இன்றே யாழ்நகரிலேயே பதிவு செய்துகொள்ள
நீங்கள் நாடவேண்டிய நம்பிக்கையான ஒரே ஸ்தாபனம்

குரேஸ் ட்ரவல் சேர்விசஸ் (பிறைவேற்) லிமிட்டெட்

கொலன்ட் வழியாக பிரான்ஸ், ஜெர்மனி
செல்வதற்கான சகல ஏற்பாடுகள்,
மற்றும் பெல்ஜியம் விசாவுடன் பயணச்சீட்டுக்களை மிகக் குறைந்த
கட்டணத்தில் பெற உடனே நாடுங்கள்.

CROSS TRAVEL
SERVICES
(PTE) LTD.
STAGE II MODEL MARKET,
No. 5, 1st FLOOR,
BUS STAND CENTRE ROAD,
JAFFNA.
Phone No. 22065, 22040

★ பேளின் (BERLIN) ரூபா 9,500/- ஒரு வழி பயணச்சீட்டு

**ஹரன்** (யாழ். நகர்)
தினசரி 10-30, 2-30, 6-30
ஜெய்சங்கர் - பாரதி
**உங்கள் விருப்பம்**
(புதிய பிரதி)

**ஸ்ரீதர்** (யாழ். நகர்)
தினசரி 10-30, 2-30
6-00
கமல்-ஸ்ரீதேவி
சில்க் சுமிதா
**மூன்றும் பிறை**
(வெள்ளிவிழா சித்திரம்)

**ராஜா** (யாழ். நகர்)
தினசரி 4 காட்சிகள்
சிவாஜி - சரோஜாதேவி
**பாகப்பிரிவினை**
16-12-83 முதல்
BATTLE CREEK
BRAWL

**சாந்தி** (யாழ். நகர்)
10.30, 2.30, 6.30 மட்டும்
5-வது வெற்றி வாரம்
சிவாஜி - கே. ஆர். விஜயா
நடிப்பால்... படப்பிடிப்பால் இனிய இசையால்...
சிறந்த கதையால் உயர்ந்த
**ஊரும் உறவும்**
வண்ணச்சித்திரம்

**லிடோ** (யாழ். நகர்)
தினசரி 3 காட்சிகள்
எம். ஜி. ஆர்.
**நீரும் நெருப்பும்**
(கலர்)

**வெலிங்டன்** (யாழ். நகர்)
தினசரி 3 காட்சிகள்
சிவாஜி - விஜயா
**நெஞ்சிருக்கும் வரை**

**வின்ஸர்** (யாழ். நகர்)
தினசரி 10-30, 2-30,
6-15, 9-30
தென்னகத் திரைவானில் தேன்சிந்தும் அமுத ராகமாய், காதலின் அமர காவியமாய் பார்ப்பவரைப் பரவசமூட்டி - மீண்டும் பார்க்கத்தூண்டும் - சிந்திக்க வைக்கும் - அதி உன்னத காதல் ஓவியமாய் பவனி வந்த வண்ணத்திரை விருந்து!
சிவகுமார் - ராதா
(அலைகள் ஓய்வதில்லைபுகழ்)
சிவச்சந்திரன் - அருணா
நடித்த
**ஆனந்தராகம்**

**Regal**
Daily 10-30, 2-30, 4-45
7-00 p. m Only
பரபரப்பான
காதல் விவகாரம்...
தன் பணத்தால் எதையும் செய்யக்கூடிய வல்லமைபொருந்திய கிரேக்க தேசத்து கோடீஸ்வரனும், பிரபல்யம் வாய்ந்த முதல் பெண்ணும் ஆகிய ஓனசிஸ் - ஜாக்குலின் கென்னடியின் காதலை சித்தரிக்கும் காவியம்
Anthony Quinn......
Jacqueline Bisset...... in
**The Greek Tycoon**
(Color)
வெகு விரைவில்
**பயணங்கள் முடிவதில்லை**

# குறளுக்கு இலக்கணமாக வாழ்ந்தவர்



சுதுமலையில் வாழ்ந்து சிறந்தவர் ஆறுமுகம் கதிராசிப்பிள்ளை தம்பதிகள். இத்தம்பதிகள் தரம் பெற்ற பிள்ளைகளுள் ஒருவருக்கு முத்துவேலு என்று நாமகரணஞ் செய்தனர். செல்லப் பெயர் 'யோக்கியம்' என்பது. சிலருக்குப் பெயர் சற்றும் பொருந்துவதில்லை. ஆறுமுகம் தம்பதியினர் பிள்ளைக்கு வைத்த முத்துவேலு என்ற பெயரும், யோக்கியம் என்று அங்கு வாழ் மக்கள் எல்லோரும் அழைத்த செல்லப் பெயரும் வெகுபொருத்தம்.

திரு. முத்துவேலு அவர்கள் பிரிய பத்தினி மாசிலாமணி! திரு. முத்துவேலு மாசிலாமணி தம்பதிகளின் இல்வாழ்க்கை மேற்குறிப்பிட்ட மாசிலாமணி மாலையாகப் பிரகாசித்து உலகுக்குப் பயனூட்டியது. முத்துமணி மாலை வீசிய பொற்கிரணங்கள் மூன்று. வைத்தியகலாநிதி மகேசுவரன், சோமசுந்தரி, எம். எஸ் ஸி. பட்டதாரியான பாலகிருஷ்ணன். முச்சுடர்களின் ஒளிக்கிரணம் பெற்ற ஒளிக்கதிர்கள் முறையே தேவகி, வைத்திய கலாநிதி சிவலிங்கம், மகாலட்சுமி: உத்தமோத்தமர்கள்.

பண்ணிய பயிரிலே புண்ணியங்கள் கண்டவர் திரு. முத்துவேலு. இளமையில் மானிப்பாய் இந்துக்கல்லூரியில் ஆசிரியராக இருந்த இவருக்குச் சுவாமி விபுலாநந்த அடிகளாரின் தொடர்வு ஏற்பட்டது. சமயத்துறையில் இத்தொடர்பு அவரை ஈடுபடவைத்தது. அன்னாரின் உயர்ந்த கல்வி முயற்சி உத்தியோகத்துறைக்கு மாற்றிவிட்டது. சாதாரண குமாஸ்தாவாகச் சேர்ந்து, பதிவாளராகப் பணி பல சிறப்புடன் ஆற்றி, ஈற்றில் எழுதுவினைஞர் நாயகமாக குருநாகல் கச்சேரியில் வியத்தகு சேவை புரிந்தார்.

தான் பெற்ற கல்வியைப் பற்றிச் சிந்திப்பதும், கற்றோரைப் பேணலும் இவருக்கு இருந்த பேரிச்சைகளாம். உரும்பிராய் சைவத்தமிழ் வித்தியால பெற்றோர் ஆசிரியர் சங்கம், உரும்பிராய் வடக்கு கிராம முன்னேற்றச் சங்கம், குருநாகல் சைவமகாசபை முதலாம் ஸ்தாபனங்களுக்குத் தலைமைதாங்கியதன் மூலம் அவர் ஆற்றிய உன்னசேவை என்றும் நினைவில் நிற்கக்கூடியவை.

''உடுக்கை யிழந்தவன்
கைபோல வாங்கே
இடுக்கண் களைவதாம்
நட்பு.''

என்ற வள்ளுவர் குறளுக்கு இலக்கணமாக வாழ்ந்த உயர் பெருந்தகையாளர்.

'இடுக்கண் வருங்கால் நருக' என்பதை இவரிடம்தான் காணமுடிந்தது. ஆன்றமைந்த கொள்கைச் சான்றோராகிய திரு. முத்துவேலு அவர்கள் தாம் வாழ்ந்த எண்பத்தொரு ஆண்டுகளிலும், உடல், பொருள், ஆவி மூன்றையும் உலக உயர்வுக்கு அர்ப்பணித்த 'முதுபெரும் யோக்கியர்' என்று துணிந்து கூறலாம். திரு. ஆறுமுகம் முத்துவேலு (யோக்கியம்) அவர்களது தன்னலமற்ற சேவையை நாம் மதிப்பீடுசெய்யப்புகுவோமேயானால், ஆயிரம் சமாதான நீதிபதிப்பட்டங்கள் வழங்கினாலும், அப்பட்டங்கள் அவரது சேவையை விளக்குவனவாகா என்ற முடிபுக்கே வரக்கூடியவர்களாக இருப்போம்.

—அருணசலம் பஞ்சாட்சரம்

# இரத்த தானத்துக்கு நேரம் ஒதுக்கீடு!

[மன்னார்]

மன்னார் பகுதியில் இரத்த தானம் செய்ய விரும்புவோரின் வசதிக்காக மன்னார் அரசினர் ஆதார வைத்தியசாலையில் பகல் 12 மணிமுதல் பிற்பகல் 3 மணிவரை இரத்ததானம் செய்வதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

மன்னார் மேற்குகிராமோதய சபைத்தலைவர் திரு. எம். சர்க்காரியாஸ், விசேட சேவை அலுவலர் திரு. கி. எஸ் பிலிப்புபிள்ளை ஆகியோர் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுடன் தொடர்புகொண்டதையடுத்தே மன்னார் அரசினர் ஆதாரவைத்தியசாலையில் இரத்ததானம் செய்வதற்கான இந்த ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

**ராணி** (யாழ். நகர்)
தினசரி 10-30, 2-30, 6-30
சிவாஜி - மஞ்சுளா
**எங்க தங்க ராஜா**

**வெஸ்லி**
(மானிப்பாய்)
தினசரி 2-30, 6-00
**காதலிக்க நேரமில்லை**

இன்னும் 6 தினங்கள் மட்டும்
**மனோகரா** (யாழ். நகர்)
தினசரி 10-30, 2-30, 6-15
சிவாஜி — K.R. விஜயா, மாதவி, சுருளிராஜன், ஸ்ரீபிரியா மற்றும் பலர்
திறம்பட நடித்த
வர்ணப் படம்
**சத்திய சுந்தரம்**

# இஸ்லாமிய பெரியார் திருவாசக உரை!

(மன்னார்)

திருக்கேதீஸ்வரம் திருவாசக மடத்தில் இம்மாதம் 18ஆம் திகதி ஆரம்பமாகும்திருவாசக விழாவில் இஸ்லாமிய பெரியார் ஒருவர் திருவாசகத்தில் பெருமைபற்றி உரையாற்றுவார்கள்.

விடத்தல் தீவைச்சேர்ந்த ஜனாப் முகம்மது காசிம் ஆலிம் புலவர் அவர்களே திருவாசகத்தின் பெருமைபற்றி உரையாற்றவுள்ள இஸ்லாமிய அறிஞராவார். (கி)

# தமிழர் கல்வி சில சிந்தனைகள்

(யாழ்ப்பாணம்)

பேராசிரியர் கைலாசபதி நினைவுச்சொற்பொழிவு, யாழ் பல்கலைக்கழக, கைலாசபதி கலையரங்கில், நாளை வெள்ளிக்கிழமை பிற்பகல் நடைபெறும் கலாநிதி கா. சிவத்தம்பி தலைமையில் நடைபெறும் இக் கூட்டத்தில் 'தமிழர் கல்வி' சில சிந்தனைகள் என்றபொருள் பற்றிதிரு என். சபாரத்தினம் சொற்பொழிவு நிகழ்த்துவார்.

யாழ் பல்கலைக்கழக தமிழ்த் துறையினர் இதனை ஒழுங்கு செய்துள்ளனர்.

# "சமாதான விரும்பிகளுக்கு பெரும் பேரிழப்பு"

(அரியாலை)

''தமிழ் மக்களின் சகல பிரச்னைகளும் அரசியல் ரீதியில் பூரணமாகத் தீர்வுகாணப்படவேண்டுமென்று விரும்பிய இவர், வட்டமேசை மகாநாட்டைக் கூட்டி தமிழ் மக்களின் பிரச்னைகளுக்குத் தீர்வுகாண வேண்டுமென்று அரசு முயற்சி செய்யும் இந்தநேரத்தில் அவர் மறைந்தது இந்த நாட்டிற்கும், சமாதானத்தை விரும்பிநிற்போருக்கும் விசேடமாக தமிழ் மக்களுக்கும் பேரிழப்பாகும்.''

இவ்வாறு யாழ்ப்பாணம் புனித பேதுறுவானவர் ஆலயத்தில்நடைபெற்ற குருநாகல் அத்தியட்சாதீன பேராயர் அருட்திரு. லக்ஷ்மன் விக்கிரமசிங்கா ஆண்டகையின் மறைவு குறித்து நடைபெற்ற ஆராதனையில் பேராசிரியர் லூதர் ஜெயசிங்கம் அருளுரை நிகழ்த்துகையில் குறிப்பிட்டார்.

யாழ்ப்பாண கிறிஸ்தவ ஐக்கிய சங்கத்தின் ஆதரவில் நடைபெற்ற நன்றிதெரிவிக்கும் ஆராதனையை சங்கத் தலைவர் திரு. யே. கி. அரசரத்தினம் தலைமைதாங்கி நடத்தினார்.

அருட்திரு. ஐ. செல்வரத்தினம் அடிகளாரின் தேவாரத்துடன் ஆரம்பமாகிய இவ் வாராதனையில் பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி அதிபர் திரு. டபிள்யூ. என். எஸ். சாமுவேலுவும் யாழ்ப்பாண அரசாங்க அதிபர் திரு. தேவநேசன் நேசையாவும் வேதப் பாடங்களை வாசித்தார்கள்.

தென்னிந்திய திருச்சபையின் யாழ். திருமண்டலப் பேராயர் பேரருட்திரு. டி. யே. அம்பலவாணர் ஆண்டகையின் தேவாசீர்வாதத்துடன் நன்றி தெரிவிக்கும் ஆராதனை முடிவடைந்தது.

துப்பாக்கி

# கொள்ளை: சந்தேக நபர் அடையாளம் காட்டப்பட்டார்!

(மன்னார்)

மடு-பண்டிவிரிச்சான் வீதியில் இடம்பெற்ற துப்பாக்கிக் கொள்ளைச் சம்பவம் தொடர்பாக நடைபெற்ற அடையாள அணிவகுப்பில் சந்தேகத்தின் பேரில் ஏற்கனவே கைதுசெய்யப்பட்ட மட்டக்களப்பைச் சேர்ந்த நபர் ஒருவர் அடையாளம் காட்டப்பட்டார்.

மன்னார் நீதவான் முன்னிலையில் கடந்த புதன்கிழமை நடைபெற்ற இவ்வடையாள அணிவகுப்பின்போது துப்பாக்கியை பறிகொடுத்தவரே சந்தேக நபரை அடையாளம் காட்டினார்.

பண்டிவிரிச்சான் பகுதியைச் சேர்ந்த விவசாயிகள் தமது துப்பாக்கிகளை முருங்கன் பொலிசில் ஒப்படைக்கவென அவற்றை பஸ்ஸில் எடுத்து வரும்போது துப்பாக்கிமுனையில் பஸ்ஸை வழிமறித்த சிலர் விவசாயிகளின் துப்பாக்கிகளைப் பறித்துச்சென்றனர்.

இதுபற்றி விசாரணை நடத்திய பாதுகாப்புப்படையினர் 6 துப்பாக்கிகளை மீட்டதையடுத்தே அடையாள அணிவகுப்பு நடைபெற்றது. (கி)

# "குழந்தைகளின்மனப்பாங்கு பெரியோரிடமும் வேண்டும்"

(கரவெட்டி)

''ஆண்பிள்ளைகளைப் பெற்றுள்ள எமது பெற்றோர் கவலையும் பீதியும் அடைந்துள்ள இன்றைய காலகட்டத்தில் ஒன்றுமே அறியாத இப்பிஞ்சுக் குழந்தைகளின் இனிய நிகழ்ச்சிகள் எம்மை ஆறுதலில் ஆழ்த்துவது ஓரளவு மகிழ்ச்சியை அளிக்கிறது'' என்று கரவெட்டி பங்குத் தந்தை அருட்திரு. ஞானனந்தன் அடிகளார் கரவெட்டி லூர்த்து மாதா கன்னியர்மட பாலர் பாடசாலையின் வருடாந்த கலைவிழாவில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றுகையில் குறிப்பிட்டார்.

கரவெட்டி திரு இருதயக் கல்லூரியில் கல்லூரி அதிபர் திரு தோஸ்ஈப்பன் தலைமையில் நடைபெற்ற இவ்வைபவத்தில் பிதா. ஞானனந்தன் மேலும் பேசுகையில் கூறியதாவது:

''கள்ளங்கபடமற்ற இக் குழந்தைகளின் மனப்பாங்குகள் பெரியவர்கள் மத்தியிலும் நிலவுமானால் உலக நாடுகளில் அமைதியும் சமாதானமும் என்றும் நிலைத்தோங்கும்.'' இதுபோன்ற குழந்தைகள் விழாக்கள் பெரியவர்களாகிய எமக்கு ஒரு வழிகாட்டியாக அமைவதுடன் இக்குழந்தைகளும் எதிர்காலத்தில் சமாதானத்துடனும் பண்புடனும் வாழ இறைவன் அருள்புரிய வேண்டுகிறேன்'' இவ்வாறு கூறினார். கன்னியர்மடத் தலைவி சகோ. சகோதரி எம். தேவநேசம் நன்றி கூறினார்.

# சங்கானை உதவி அரச அதிபர் அலுவலகம்

(பண்டத்தரிப்பு)

சங்கானையில் தனியாருக்கு சொந்தமான கட்டிடத்தில் இயங்கி வரும் வலிமேற்கு உதவி அரசாங்க அதிபர் அலுவலகத்தை அங்கிருந்து சங்கானைகலாசாரமண்டபத்திற்கு தற்காலிகமாக இடமாற்றம் செய்வதற்கான சிபாரிசை தற்போது வலிமேற்கு உதவி அரசாங்க அதிபரின் வேலைகளை கவனித்து வரும் வலிதென் மேற்கு உதவி அரசாங்க அதிபர் திரு. அ. மகாதேவா யாழ். மாவட்ட அரசாங்க அதிபருக்கு செய்துள்ளார்.

சங்கானையில் தற்போதைய அலுவலகம் இருக்கும் கட்டிடத்தை தமக்கு திருப்பித் தருமாறு கட்டிட சொந்தக்காரர் நீண்டகாலமாக வற்புறுத்திக் கேட்டு வந்ததை தொடர்ந்து மேற்கண்ட சிபாரிசு செய்யப்பட்டுள்ளது.

யாழ். மாவட்ட அரசாங்க அதிபரின் அங்கீகாரம் இதற்கு கிடைத்தவுடன் அலுவலகம் சங்கானை கலாசார மண்டபத்திற்கு இடமாற்றம் செய்யப்படுமென்று இது பற்றி தெரிவிக்கப்படுகின்றது.

# இலவசநூல்

[சிழிபுரம்]

திருவெம்பாவைக் காலத்தில் புராணபடனம் நடத்தும் ஆலயங்கள் ஒவ்வொன்றுக்கும் திருவாதவூரடிகள் செய்யுள் நூலை இலவசமாக வழங்க வழக்கம்பரை சனசமூக பஜனைச் சபையினர் முன்வந்துள்ளனர். உரையாசிரியர் சைவமணி சி. மருதப்பிள்ளையால் பதிக்கப்பட்டு வெளியிடப்பட்ட இந்நூலை பெற்றுக்கொள்ள விரும்பும் ஆலய நிர்வாகத்தினர் தபால் முத்திரை அனுப்பி தபால் மூலம் பெற்றுக் கொள்ளலாம் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

# அமைச்சு செயலாளருக்கு கடூழியச் சிறை!

(கொழும்பு)

ராஜாங்க அமைச்சின் உதவிச் செயலாளரான ஆர். ஏ. லெனோரா என்பவருக்கு லஞ்சக் குற்றச்சாட்டின் கீழ் பதினெட்டு மாதக் கடூழியச் சிறைத் தண்டனையும், நாலாயிரம் ரூபா அபராதமும் விதிக்கப்பட்டது.

கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி திரு. கே விக்கினராஜா கடந்த செவ்வாய் கிழமை இத் தண்டனைகளை விதித்தார். லஞ்ச ஆணையாளர் திணைக்களமே குற்றவாளியாகக் காணப்பட்ட ஆர். ஏ லெனோராமீது வழக்குத்தாக்கல் செய்திருந்தது.

அரசாங்க அச்சகத்தைச் சேர்ந்த கன்னங்கரா என்பவரிடம் நான்கு தடவைகள் இவர் லஞ்சம் பெற்றதாகத் தெரிவிக்கப்பட்டது. இதனையடுத்து நீதிபதி, ஒவ்வொரு தடவைக்கும் தலா ஆயிரம் ரூபாவாக மொத்தம் நாலாயிரம் ரூபா அபராதத்துடன் 18 மாதக் கடூழியச் சிறைத் தண்டனையையும் இவருக்கு விதித்தார். அரசதரப்பில் சட்டத்தரணி கே. அருளானந்தன் ஆஜரானார். (கி)

# ஜி. ஸி. ஈ. பரீட்சை

## பாதுகாப்பு ஏற்பாடுகள்

[கல்வியங்காடு]

இம்மாதம் 20-ம் திகதி ஆரம்பமாகும் ஜி. ஸி. ஈ. சாதாரண பரீட்சையின்போது யாழ். மாவட்டப் பரீட்சை நிலையங்களின் பாதுகாப்பு சென்ற ஆகஸ்ட் மாதம் நடந்த ஜி. ஸி. ஈ. உயர்தரப் பரீட்சைக்கு இருந்த பாதுகாப்பு அமைப்பினையே கொண்டிருக்கும் என்றும், மேலதிக பாதுகாப்பு ஒழுங்குகள் செய்யப்படவில்லை என்றும் யாழ். கல்வித் திணைக்கள பரீட்சை நடவடிக்கைகளில் இருந்து அறிய வருகிறது.

# இப்படியும் நடக்கிறது

### முன்னும்

அந்த சொகுசான பஸ்ஸில் அவர்கள், ஊர் திரும்பிக் கொண்டிருக்கின்றார்கள்.

இடையில் இரவுச் சாப்பாட்டுக்காக பஸ் ஒரு கடையில் நிறுத்தப்படுகிறது.

பஸ்ஸில் வந்தவர்களில் மூன்றுபேர் 'ஏதோ' சாப்பிட்டுவிட்டு கதிரையைவிட்டு எழும்புப்போது, 'பில்' முப்பத்து எட்டாக 'குரல்' எழுப்புகிறது! முகத்தில் 'கசமுச' தெரிந்தாலும், ஒன்றும் பேசாமல் பணத்தைக் கொடுத்துவிட்டு வெளியே வந்து விமர்சனத்தில் இறங்குகின்றனர்.

''நான்கு ரொட்டியும் சம்பலும், தேநீரும் எடுத்தோம். இவ்வளவு பணம் எப்படி வரும்...''—இதுதான் அவர்களின் மன உளைச்சல்.

இவர்களின் சத்தம் பெரிதாக வரவே) சாரத்தை மடித்துக் கட்டிக் கொண்டு முதலாளி வெளியே வருகிறார். வினவினார். ''அதுதான் கணக்கு'' என்று கம்பீரக் குரலுடன் கூறினார். மூச்......! அந்த மூன்று பேரும் ஆளைவிட்டால் போதும் என்று பஸ்ஸில் மீண்டும் ஏறிக்கொள்கின்றனர்.

### பின்னும்

ஒரு நாள், இரவுப் பொழுது, சொந்த ஊர் நோக்கி பஸ்ஸில் திரும்பிக் கொண்டிருந்த அவர், இடையில் சாப்பாட்டுக்காக நிறுத்தப்பட்டதும் இறங்குகின்றார். 'ஆடர்' செய்கின்றார். ஏதோ சாப்பிடுகின்றார். கணக்குக் கேட்டபோது, 'பில்' பயங்கரமாக இருக்கிறது. பணத்தைக் கொடுத்துவிட்டு, ''முதலாளி எங்கே?'' என்று கேட்கிறார். இல்லை என்று பதில் கிடைத்ததும், அவர் இப்படிக் கூறுகின்றார்:

''எங்களைப் போன்ற பிரயாணிகளை வைத்துத்தான் கடை நடத்துகின்றீர்கள். இப்போது கடையும் வளர்ந்துவிட்டது. நாங்கள் இவற்றைச் சாப்பிடுகின்றவர்கள்தான். இது மட்டுமல்ல, தேவைப்பட்டால் மனித இறைச்சியையும் சாப்பிடத்தான் வேண்டும்...'' என்று கர்ஜித்துவிட்டார்!

விளைவு? ஒருநாளும் இல்லாமல் அந்தத் தடுப்பு எல்லையில் அந்த பஸ் பிரயாணிகளுக்கு கடுமையான சோதனை. அக்குவேறு ஆணி வேறாக ஒவ்வொரு பார்சலையும் ஆராய்ந்துவிட்டார்கள்! காரணம் —

ஒரு பஸ்ஸில் 'புலி' வருகிறது என்று அந்த தடுப்பு எல்லை அதிகாரிகளுக்கு க்ஷண வேகத்தில் குறிப்பிட்ட சாப்பாட்டுக் கடையிலிருந்து தொலைபேசி கிடைத்துவிட்டது.

-''ஊடுருவி''

## ரூபவாஹினியில் இன்று

மாலை

6-02 'டெலிமச்' - ஜெர்மன் விளையாட்டுகள்.
7-00 செய்திகள் (தமிழ்)
7-15 சிங்கள நிகழ்ச்சி.
8-15 செய்திகள் (சிங்களம்)
8-30 திரைப்பட ஜனாதிபதி விருதுபெற்ற கலைஞர்களுடன் சந்திப்பு.
9-00 ஜனாதிபதி விருது பெற்ற சிங்கள திரைப்படம்.
9-30 செய்திகள் (சிங்களம்).
9-50 திரைப்படபடத் தொடர்ச்சி.
11-30 நிகழ்ச்சிகள் முடிவு.

## பாடசாலை அதிபரின் மர்ம மரணம்

(கிளிநொச்சி)

புத்துவெட்டுவான் நடுக்காட்டில் 25 அடி உயரமான மரத்தில் அதிபர் ஒருவரின் சடலம் சுருக்கிட்ட நிலையில் கண்டு பிடிக்கப்பட்டது.

இச்சடலம் புத்துவெட்டுவான் அரசினர் பாடசாலை அதிபர் ஈ. எஸ். பேர்ணன் டோவினுடையது என அடையாளம் காணப்பட்டுள்ளது.

இறந்தவருக்கு கிளிநொச்சி திருநகரில் சொந்த வீடு இருப்பதாகவும், இவரது மனைவியும் ஒரு ஆசிரியை என்றும் கூறப்படுகிறது.

இறந்தவர் ஒரு கிழமைக்கு முன் புத்துவெட்டுவான் பாடசாலைக்குச் சென்றிருந்தாரென்றும், வீடு திரும்பவில்லையென்றும், சந்தேகத்தின் பேரில் தேடுதல் நடத்தியபோது விடுதியில் அதிபர் இல்லையென்றும் கூறப்பட்டது. விடுதியில் சமையல்செய்த அடையாளம் காணப்பட்டதாகவும் கூறப்படுகிறது. பின்னர் இவரது சடலம் காட்டில் கண்டுபிடிக்கப்பட்டது.

இந்த மர்மமரணம் தொடர்பாக கிளிநொச்சிப் பொலிசார் விசாரணைசெய்து வருகின்றனர். (க)

## சந்தேகநபர் கைது

(யாழ்ப்பாணம்)

சுதுமலை ஆயுர்வேத வைத்தியர் அம்பலவாணர் கத்திக்குத்துக்குப் பலியானது தொடர்பாகச் சந்தேக நபரான தவராஜா என்ற இளைஞர் பொலிசாரினால் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

இந்த இளைஞர் கடந்த ஒரு மாதமாக வைத்தியரிடம் சிகிச்சை பெற்றுவந்ததாகக் கூறப்படுகிறது.

மரண விசாரணைக்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. (க)

## 96 வயது வயோதிபர் வான்விபத்தில்பலி

(யாழ்ப்பாணம்)

கோப்பாய் தெற்கைச் சேர்ந்த 96 வயது வயோதிபர் வான் விபத்தில் பலியானார். இச்சம்பவம் நேற்று முன்தினம் நடந்தது.

கந்தர் பெரியதம்பி என்ற என்ற வயோதிபரே பலியானவராகும்.

யாழ். பதில் நீதவான் க. கேசவன் மரண விசாரணை நடத்தினார்.

இறந்தவர் கோப்பாய் பேச்சியம்மன் கோவிலடியில் வீதியைக் கடக்கும்போது பருத்தித்துறையிலிருந்து வந்த தனியார் வான் ஒன்றினால் மோதி விழுந்தாரென்றும், சாரதியும் வீதியில் நின்ற சிறுவனொருவனும் அவரை யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதித்தாகவும், அங்கு அவர் மரணமானாரென்றும் விசாரணையில் கூறப்பட்டது.

வான் சாரதி செல்லத்துரை ராசேந்திரம், 2500 ரூபா பிணையில் செல்ல அனுமதி வழங்கப்பட்டார். அவரை யாழ். நீதவான் முன்னிலையில் 84 ஜனவரி 4-ம் தேதி ஆஜராகும்படி தெரிவிக்கப்பட்டது.

விசாரணை முடிவில் விபத்து மரணம் எனத் தீர்ப்பளிக்கப்பட்டது. (க)

## யாழ்ப்பாண...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

யாழ். ஆஸ்பத்திரி சேவைகள் வழக்கம்போல் நடந்தன. நண்பகல் பார்வையாளர்கள் வழக்கத்திலும் பார்க்கக் குறைவாகக் காணப்பட்டனர். பிற்பகல் பார்வையாளர்கள் மிகச் சிலரே வந்திருந்தனர்.

### பாடசாலைகள் இயங்கவில்லை

அரசாங்கப் பாடசாலைகளில் 3ம் தவணைப் பரீட்சைகள் நேற்று நடைபெறவில்லை. பாடசாலைவந்த ஒரு சில மாணவரும் காலையிலேயே திரும்பிச் சென்றுவிட்டனர்.

யாழ்ப்பணத்திலுள்ள தனியார் கல்லூரியொன்றில் மிகக் குறைவாக மாணவர் வந்திருந்ததால் நேற்று நடைபெறவிருந்த பரீட்சைகளும் ஒத்திப் போடப்பட்டன.

தனியார் கல்வி நிலையங்களில் நேற்று வகுப்புகள் நடைபெறவில்லை. மாணவர்களும் இக் கல்வி நிலையங்களுக்கு வரவில்லை.

### சினிமாக் காட்சிகள் இல்லை

தியேட்டர்களில் சினிமாக் காட்சிகள் எதுவும் நேற்று நடைபெறவில்லை. தனியார் கொழும்பு பஸ் சேவைகளும் நேற்று இடம்பெறவில்லை.

வீதிகளில் சில வயோதிபர்களையும் நடுத்தர மனிதர்களையுமே காணமுடிந்தது. இளைஞர்களையோ, மாணவர்கள் நடமாட்டத்தையோ வீதியில் அதிகமாகக் காணப்படவில்லை. முப்படையினர் ஜீப்வண்டிகளில்ரோந்து நடவடிக்கைகளில் ஈடுபட்டிருந்தனர்.

யாழ். கச்சேரியில் வழக்கத்திலும் பார்க்கக் குறைவாகவே ஊழியர்கள் வந்திருந்தனர். கச்சேரியில் பொதுமக்கள் எவரும் காணப்படவில்லை. அரசாங்கக் காரியாலயங்களிலும் வேலைகள் மந்தமாகவே நடைபெற்றன.

யாழ். மாநகர சபையில் ஊழியர் வரவு குறைவாக காணப்பட்டது. சிலர் லீவில் சென்றிருந்தனர். பொதுமக்கள் அங்கு காணப்படவில்லை.

நடைப்பாதை வியாபாரிகள் எவரும் காணப்படவில்லை. பஸ்நிலையத்தில் வழக்கமாக காணப்படும் பிச்சைக்காரர்களையும் நேற்றுக் காணவில்லை. சந்தைகளும் கூடவில்லை.

## பூர்வாங்க...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

மாட்டாதென்றும் சர்வகட்சி மகாநாடு ஒழுங்குகள் பற்றியும் அம்மகாநாட்டுக்கான விதிமுறைகள் பற்றியும் ஆராயப்படுமென்றும் தெரிவிக்கப்பட்டது. (கி)

## மரண அறிவித்தல்

### தம்பு சேனாதிராசா

நீராவியடியைச் சேர்ந்த யாழ். இந்துக் கல்லூரி முன்னாள் ஆசிரியர் தம்பு சேனாதிராசா நைஜீரியாவில் காலமானார். இவர் காலஞ்சென்ற தம்பு மாஸ்டரின் (யாழ் இந்துக் கல்லூரி முன்னாள் ஆசிரியர்) புதல்வரும், பத்மாவதியின் அன்புக் கணவரும், கௌசல்யா, லோகநாதன், சந்திரிகா (யாழ். பல்கலைக் கழகம்), சித்திரா (யாழ். பல்கலைக்கழகம்), ரேகினி, சுந்தரியின் அன்புத் தந்தையும், செ. சிவகுமாரின் மாமனுமாவர். ஈமைக் கிரியைகள் நைஜீரியாவில் நேற்று நடைபெற்று விட்டன.

26, சிவகுருநாதர் வீதி,
பிறவுண் ரோட்—நீராவியடி.

10565

## கைலாசபதி நினைவுச் சொற்பொழிவு

[யாழ்ப்பாணம்]

பேராசிரியர் கைலாசபதியின் முதலாண்டு நினைவு சொற்பொழிவு யாழ் வீரசிங்கம் மண்டபத்தில், இம்மாதம் 18ம் தேதி பிற்பகல் நடைபெறவிருக்கிறது.

திரு அ. ஜெயரட்ணம் தலைமையில் நடைபெறவிருக்கும் இக்கூட்டத்தில் பேராசிரியர்கள் ப. சந்திரசேகரம், சி. சிவசேகரம், திருமதி சித்திரலேகா மௌனகுரு, திரு. கே. செந்தில்வேல், திரு என். இரவீந்திரன் ஆகியோர் உரையாற்றுவார்கள். தேசிய கலை இலக்கியப் பேரவை இதனை ஏற்பாடு செய்துள்ளது. [க]

## மே. இந்தியா...

(1-ம் பக்கத் தொடர்சி)

மாஷர் சிறப்பாக பந்துவீசி 37 ஓட்டங்களைக் கொடுத்து 6 விக்கெட்டுகளை வீழ்த்தினார்.

இப்போட்டியில் சிறந்த வீரருக்கான பரிசை, மே. இந்தியக் கோஷ்டியின் காப்டன் கிளைவ் லோயிட் தட்டிக் கொண்டார்.

ஸ்கோர் விபரம்: இந்தியா 241, 99. மே. இந்தியா 377.

மேற்படி இருகோஷ்டிகளுக்குமிடையே இதுவரை நடைபெற்று முடிந்த ஐந்து டெஸ்ட் போட்டிகளில், மே. இந்தியா இரு போட்டிகளில் வெற்றி பெற்றது மூன்று போட்டிகள் வெற்றி-தோல்வியின்றி முடிவடைந்தது.

இப்பத்திரிகை "ஈழநாடு" லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம், ... 1983-ம் ஆண்டு டிசம்பர் மாதம் 15-ந்திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது. Registered as a News Paper at the General Post Office Sri Lanka, under number B 100236/81. Eelanadu- P. O.Box, 49, Telephone, 22389 — 24126.